339

339

Verefied

ஜே. எல். அனந்தய்யர்
~~செவ்வாய் பேட்டை~~, ஸேலம் 2/2
"வைத்திய நிகண்டு" கட்டு-7.

தேதி: 26.12.64.
ஓலைச் சுவடியின் பெயர்: "வைத்திய நிகண்டு" கட்டு-7.
உரிமையாளரின் பெயர்: ஜே.எல்.அனந்தய்யர்,
இடம்: செவ்வாய் பேட்டை, சேலம்.

******

<u>தண்டில் ரத்தம் விழுகிறதுக்கு:</u>-

நறுவிலி வேர் பட்டைச் சாறும் சர்க்கரையும் நன்னாரி வேர் சீரக மரைத்துப் பாலில் கொடுக்கத் தீரும்.

கீளா நெல்லி வேர் சீரகம் சுக்கு இவை பாலில் குடிக்கவும்.

செருப்படிச் சாறு சர்க்கரை காராட்டுப் பாலில் குடிக்கவும். எலுமிச்சம் வேர் மூலங் கொழுந்து தண்ணீரில் அரைத்துக் குடிக்கத் தீரும்.

<u>மூலத்துக்கு:</u>-

கருஞ்சீரகம், சுக்கு, மிளகு அரைத்து மூலத்தில் 10-நாள் தடவவும்.

<u>சீ மூலத்துக் கிருமிக்கு:</u>-

பெருங்காயம், சுக்கு, மிளகு, இவை சமன் கூட்டி இள வறுப்பாய் வறுத்துப் பொடி செய்து நீர்ப் புலா வேர் புளியங் கொட்டைத் தோடு நறுக்கி மூன்று பிடி சேர்த்துக் குள்ளே வைத்து முழுங்கவும். மூலக் கிருமி வாய்வுந் தீரும்.

<u>மூல முளை கரைய:</u>-

மஞ்சள்சள் கள்ளிப் பாலிலரைத்து முளையில் தடவவும். முளை கரையும். மாவிலிங்க யிலை கள்ளியிலை யெருக்கிலை இது மூன்றும் இடித்து தணலி லிட்டுப் புகை பிடிக்க முளை கரையும்.

<u>ரெத்த மூலத்துக்கு:</u>-

விலாமிச்சம் வேர், லவுங்கப் பட்டை, மரமஞ்சள் இவை வகைக்கு காசிடை.௧ ஒரு படி தண்ணீர் விட்டு யெட்டொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்க ரெத்த மூலம் நிற்கும்.

<u>குடிநீர்:</u>-

சுக்கு, வேப்பம் பட்டை கசாயமிட்டு கொடுக்கத் தீரும். தாளிசை பத்திரி சாதிக்காய், சாதிப்பத்திரி, குங்குமப்பூ, லவுங்கப் பத்திரி, லவங்கப் பட்டை, முந்திரிப் பழம், ஏலம், அதிமதுரம், கோஷ்டம், குரோசாணி ஓமம், கொத்தமல்லி சித்தரத்தை, பேரரத்தை, சிறு நாகப்பூ, சிறுதேக்கு, கடுகுரோகணி, கண்டங்கத்திரி, நற்சீரகம், வில்வப் பிஞ்சு விளாம்பிஞ்சு, மாதளம் பிஞ்சு, திரிகடுகு, திரிபாலை, வெட்டி வேர், விலாமிச்சம் வேர் இவை சமன் கூட்டி இடித்து வஸ்திர காயம் பண்ணி ஒரு நேரத்துக்கு வெருகடிப் பிரமாணம் சாப்பிடவும்.

<u>வாத சரீரத்துக்கு, பித்த சரீரத்துக்கு நெய்:</u>-

இதுக்குத் தீரும் வியாதி அமலக்க பித்தம், ரெத்த பித்தம், காசம், அஸ்தி சுரம், வயத்திலுண்டான வியாதி யெல்லாந் தீரும்.

<u>மதன காமேசுர வடகம்:</u>-

சாதிக்காய், சாதிப் பத்திரி, யேலம், செங்கழுநீர்க் கோஷ்டம், பறங்கிப் பட்டை, குரோசாணி ஓமம், சீரகம், அதிமதுரம், சதகுப்பை, அதிவிடையம், கசகசா, பூனைக் காலி விரை, உளுந்து, நீர்முள்ளி விரை, எள்ளு இது வெல்லாம் வகை ஒன்றுக்கு விராகனிடை.௧, அபினி, லவுங்கம், முந்திரிப் பழம் இது-3 கஞ்சாப் பொடி பலம்.௧, இது வெல்லாங் கூட்டி இளநீர் விட்டு அரைத்து ஒரு கருகின தேங்காய் கண் திறந்து தண்ணீர் ஊத்திப் போட்டு மருந்தை இதிலடைத்து சீலை மண் செய்து எருவடுக்கி சுட்டால் வெடிக்கும் போது எடுத்து ஓட்டை தள்ளிப் போட்டு அரைத்து ஒரு பலம் சர்க்கரை கூட்டி களச்சிக்காய் பிரமாணம் உருண்டை பண்ணிப் புதுக் கலசத்தில் வைத்துக் கொண்டு ஒரு உருண்டை ராத்திரிக்குச் சாப்பிடவும். ரசவர்க்கங் கூட்டிக் கொண்டு வந்தால் சித்தானந்தம்.

பெரிய ஏலாதி சூரணம்:-

ஏலம், நாகேசுரம், நெய்தல் கேசுரம், தாமரைக் கிழங்கு, அலிவி, சந்தனம், தேவதாரம், திரிகடுகு, கொத்தமல்லி, செவியம், வெட்டி வேர், தாளிசை பத்திரி, சாதிக்காய், கிராம்பு, அகில் கட்டை, நன்னாரி வேர், குருந்தம் பட்டை, நெருஞ்சிமுள்ளு, நிலவேம்பு, சிறதேக்கு இது சமன் சர்க்கரை போட்டு பசுவின் நெய்யில் கொள்ளவும். இதக்குத் தீரும் வியாதி சிலேட்டுமம், காமாலை மூலம், அரோசிகம், பீலிசம், காசம், சுவாசம், மூத்திரரோகம், இருதய ரோகம் உன்மாந்தை இவை தீரும். சூரியப் பிரகாச முண்டாம்.

பெருங்காயச் சூரணம்:-

பெருங்காயம் விராகனிடை.க, வசம்பு விராகனிடை.க, விடாலவணம் விரா கனிடை.3, கடுக்காய் விராகனிடை.16, சுக்கு விராகனிடை.க, கோஷ்டம் விராகனிடை.8, சித்திரமூலம் விராகனிடை.7, ஓமம் விராகனிடை.5 இது வெல்லாம் சூரணம் செய்து வெந்நீரில் கொள்ள குன்மக் கிரணி தீரும். தீபன முண்டாம்.

வாத பித்த சிலேற்பனத்துக்கு:-

ஏலம், லவங்கம், லவங்கப் பத்திரி, நாகேசுரம், இலந்தைக் கொட்டை உள் பருப்பு, நெல்ப் பொரி, (பிரேங்கள)முத்தக் காசு, சந்தனம், கற்பூரம் இவை சமன் கொண்டு சூரணம் செய்து சர்க்கரையில் கொள்ள வாத பித்தம் சிலேற் பனந் தீரும்.

மேகம் இருவதுக்கும், பைத்தியம் நாற்பதுக்கும் சூரணம்:-

ஏலம், தாமரை பூத்தது, கோஷ்டம், சந்தனம், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, சடாமஞ்சி, மஞ்சள், திரிகடுகு, கொத்தமல்லி, மரமஞ்சள், விலாமிச்சம் வேர், தாளிச பத்திரி, சாதிக்காய், பச்சைக் கற்பூரம், நிலப்பனைக் கிழங்கு, சாட்டறனை வேர், தண்ணி முட்டான் கிழங்கு, பெருந் திப்பிலி, அமுக்கிறாங் கிழங்கு, கடுகுரோகனி, கஸ்தூரி மஞ்சள், நற்சீரகம், கருஞ்சீரகம், அமுர்த சர்க்கரை, அரசம் பட்டை, ஆலம் பட்டை, அத்திப் பட்டை, மிச்சிப் பட்டை, முந்திரிப் பழம், பேரிச்சம் பழம், கூகை நீர் இவை யெல்லாஞ் சமன் கட்டி சூரணம் செய்து சர்க்கரை கலந்து பசுவின் நெய்யில் கொள்ளவும். இதக்குத் தீரும் வியாதி மேகம் 20, பைத்தியம் நாற்பது, க்ஷயம் பதினொன்று, பிளவை இரு சூலம் இவை தீரும்.

க்ஷயம், ரெத்த பித்தம், காலெரிவு, எலும்புருக்கி இதக்கு மருந்து:-

வெட்டிவேர், விலாமிச்சம் வேர், சீரகம், ஏலம், லவங்கப் பத்திரி, கோஷ்டம், நெல்லி முள்ளி, நிலப்பனைக் கிழங்கு, கற்பூரம், சந்தனம், செஞ் சந்தனம், மிளகு, அதிமதுரம், நெல்பொரி, அமுக்கிரா வேர், தண்ணி முட்டான் கிழங்கு, தேள் கொடுக்கு வேர்ப் பட்டை, சாதிக்காய், தக்கோலம், முந்திரிப் பழம், குங்குமப்பூ, நாகேசுரம், நனைக் கிழங்கு, அமுர்த வள்ளிக் கிழங்கு, நெருஞ்சி வேர், இவை சமன் கட்டி சூரணம் செய்து அதில் இரண்டு பங்கில் அமுர்த சர்க்கரை கட்டி கண்ட சர்க்கரை தேன் கூட்டிக் கொடுக்கத் தீரும் வியாதி க்ஷயம், காலெரிவு, எலும்புருக்கி, சோமரோகம், மூத்திரப் பாடு, மூத்திரக் கிரிச்சம், மூத்திர தோஷம், வாத குண்டலி (பிறமேயமகை) அஷ்ட தன்மம் போகம் வீரிய விர்த்தி யுண்டாம்.

சூலை, பாண்டு தாது நஷ்டம்:-

முந்திரிப் பழம், பேரிச்சம் பழம், கூகை நீர், அரேணுகம், முத்தக் காசு, நெல்ப் பொரி, தாமரைப்பூ, நல்ல சந்தனம், சித்தமுட்டி வேர், கொத்தமல்லி, சீரகம், திப்பிலி, சத்தி யெவச்சாரம், திரிகடுகு, சதகுப்பை, செங்கழுநீர்க் கோஷ்டம், வாலுளுவை, குடப்பாலை விரை, ஓமம், சித்திர மூலம், கடுகுரோகனி,

தெசாவரம், திப்பிலி மூலம், மஞ்சட்டி, சீரகம், அதிவிடையம், கருஞ்சீரகம், வகைக்கு விராகனிடை.௨ இவை சூரணித்து நெய்யில் பதமாய் வறுத்து வெரு கடிப் பிரமாணம் கொள்ளத் தீரும் வியாதி பீனிசம் காமாலை பெரும்பாடு, கண்டமாலை, சுரோணித வாதம், சூலை வாய்வு, நரம்புச் சிலந்தி, அற்புத வாய்வு, விப்புருதி வாய்வு தீரும்.

குன்மத்துக்கு பிரண்டைச் சூரணம்:-

பிரண்டை கணு கணுவாய் முறித்து உலர்த்தி இடித்துச் சூரணம் அதிலே ரெண்டு படி ஆகும், ஒரு படி கல்லுப்பு கலந்து மோரிலரைத்து இரண்டு திரளையாக்கி, அதிலே ஒரு திரளை அடையாக தட்டி ஒரு சட்டியில் போட்டு அந்த அடையின் பேரில் நாற்பது கழல் பருப்பு பதித்து முன் திரளையும் அடைதட்டி அடையின் பேரில் மூடிச் சட்டியில் வைத்து சீலைமண் செய்து அக்கினியில் புடம் வைத்து எடுத்து அந்தச் சூரணம் பானை வாய் கட்டிச் சட்டி கொண்டு மூடி சீலை மண் செய்து அடுக்கி மண் குழைத்துப் பூசி பானை மறைய எருப் போட்டு நன்றாய் வெந்து ஆறின சீதளமான பின்னெடுத்துப் பார்க்க அந்த உப்பெல்லாம் கை இறங்கி யிருக்கும். அதை எடுத்து தேனில் இஞ்சியில் திரிகடுகு. ஊவிர் கொடுக்க கெண்டை குன்மம் கவுசை தீரும்.

பஞ்ச லவணச் சூரணம்:-

திரிகடுகு, பஞ்சலவணம், சதகுப்பை, கருங்கொள்ளு, அசமதாகம், சித்திர மூல, சேங்கொட்டை, ஆட்டுப் பெருங்காயம், கழற்சி மருந்தெல்லாம் வெவ்வேறே சூரணம் செய்து பாஷாணம் போட்டு எடுத்து சூரணம் செய்து எட்டு நாள் கொள்ள தீரும் வியாதி கவிசை, புவிசை, நீராமை, சூலை வாதம், பித்தம், காமாலை இரைப்புத் தீரும். இது நெய்யில் நெல்லிக்காய் பிரமாணம் மூன்று நாள் கொள்ளவும். சூலை குன்மம் மூல வியாதி மருந்தீடு பாண்டு மூத்திரக் கிரிச்சம், சுரோணிதம், பிரமியம் இது வெல்லாந் தீரும்.

புள் சூலை, அரையாப்பு, கண்டமாலை, பவுத்திரத்துக்கு, கோட்டுச் சூரணம்:-

புழுங்க நெல்லரிசி ஒரு படி வறுத்து எந்திரத்தில் அரைத்து அந்த மாவில் ஒரு படி எலுமிச்சம் பழச் சார் கிறுகக் கிறுக விட்டுப் பிசறி ரெண்டு உலக்கை கொண்டு இடித்து ரசம் விராகன்.௬, வெற்றிலைச் சார் விட்டு சுத்தி செய்து மாவுடனே போட்டு இரண்டு சாம பிடித்து அந்த மாவெல்லாம் கறுப்பான போது அதை யெடுத்து புதுத் தொட்டி ஊறப் போட்டு இரண்டாவது இடித்து வஸ்திர காயம் பண்ணி இந்தத் தூள் வெரு கடிப் பிரமாணம் ஒருநாக தண்ணீரில் முழுங்கவும். இப்படி அந்தி, சந்தி எழு நாள் கொள்ளவும். இதுக்கு பத்தியம் மோருஞ் சாதமும், பிஞ்சுக் காயும் கூட்டிக் கொள்ளவும். வெங்காயம், புளியிட்ட மிளகு நீர் கூட்டிக் கொள்ளவும். நெத்திலி கருவாடு கூட்டிக் கொள்ளவும்.

கிரந்தி அரையாப்புக்கு எண்ணெய்:-

சிங்கிச் சாறு படி.½, கள்ளிச் சாறு படி.¼, நெருஞ்சி வேர் பலம்.௨, சீரகம் பலம்.௨, செங்கத்தாரிப் பட்டை பலம். , அவித்து ஊற்றின எண்ணெய் படி.௨, இது வெல்லாங் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு இந்த எண்ணெய் மூன்று நாள் குடிக்க மூன்று நாள் மறு பத்தியம் பிடிக்கவும். பத்தியம் உப்பு, புளி ஆகாது. வெந்நீரும் சோறும் சாப்பிடவும்.

செத்த பிள்ளை விழ:-

முருங்கை வேரை அரைத்து காராம் பசுவின் பாலில் கொடுக்கிறது.

முலை பால் சுரக்க:- கத்தாளம் வேரரைத்து மூன்று நாள் கொடுக்கிறது. முலை சுரக்கும்.

காதில் சீ வடிகிறதுக்கு:-

நீலியிலைச் சாறு, எலுமிச்சம் பழச் சாறு, கொஞ்சம் சீரகப் பொடியும் 3-ம்

கட்டிக் காதிலே விடவும். கை கண்டது.

<u>மூன்று முறைக் காய்ச்சலுக்கு</u>:-

உத்தாமணியைக் கசக்கி ஒரு சொட்டுத் தலை உள்ளங் கையில் விடவும். நக்கவும். மூன்று முறை குளிர் சுரம் தீரும்.

<u>மூன்று முறைசுரத்துக்கு போகக் கசாயம்</u>:-

பாருலகில் கும்ப முனி யுபதேசித்த திற் பரிவாக ஆறுமுகக் கசாயந் தன்னைக் கேளும் கொடி நிலவேம்பு பற்படாகம், சீரப்பா சிற தேக்கு செங்கழு நீர் கோஷ்டம் செயலான திப்பிலியும் சமனாய்க் கூட்டி வாரப்பா ஜாலி நீ ரெட்டொன்றுக்கி வாருடனே தட்டெட்டை நேல் விட்டு நீயும் கொள்ளடா வாத பித்தம் சிலேத்பனமும் கொடியதொரு சுரங்களெல்லாம் ஓப்பிட்டொடும் கள்ளமே யில்லையடா வாதந் தீரும் கன் காலுதோடி விடும் கண்டு பாரும் வள்ளலே மறை பணிந்த மைந்தனுன் மதகெறும் வடிவேலர் சொன்னர் உள்ளபடியே சொல்லேன் கசாயப் போக்கு உத்தமனே இந்த முறை யுமதி தானே.

<u>உத்தம பூபதி மாத்திரை</u>:-

கெவுரி, லிங்கம், தாளகம், கடுக்காய், வெங்காரம், வாளம் வகைக்கு விராகனிடை.க, கஞ்சா சாற்றில் நால சாமம் அரைத்து குன்றிப் பிரமாணம் மாத்திரை செய்து கொண்டு சகல சன்னிக்கும் அநுபானம் மறிந்து செய்யவும்.

<u>தாம்பிர மெழுகு</u>:-

தாம்பிரம் சுத்தியானது பலம்.க, கெந்தகம் சுத்தியானது பலம்.உ, கரிசலாங் கண்ணி நாயுருவி, சிறு அம்மம், பச்சரிசி, மணத்தக்காளி, குப்பை மேனி, எலுமிச்சம் பழம் வகைக்கு சாறு காற் படி முதலானது சிற அம்மம் பச்சரிசிச் சாறு விட்டு சுத்தியான் கெந்தகம் கல்வத்திட்டு நாள் அரைத்து தாம்பிரத்தை ராவியாவது பீசி பிறகு போல் தகடு செய்தாவது அரைந்த கெந்தியில் பொதிந்து சார் வகைகள் சுவறச் சீறீ சுவற வட்டி கடைசியில் நிம்பச் சாறு விட்டு மெழுகு போல் மத்தித்து வைத்துக் கொண்டு வங்கச் சிமிளில் வைத்துக் கொண்டு உலருமாகில் தேனில் மத்திக் கவும். குன்மத்துக்கு பசுவின் வெண்ணெயில் குன்றிப் பிரமாணமாவது உழுந்து பிரமாணமாவது கொடுக்கவும். சன்னி தோஷம், சுரம், சூலைகளுக்கெல்லாம் தேனிலிடவும். அந்தி சந்தி கொடுக்கவும். சன்னி தோஷம், சுரம், சூலைகளுக்கு பத்தியம் அவரைப் பருப்பு வேக விட்டு இறுத்துத் தண்ணீர் கொடுக்கவும். சாதமுங் கொடுக்கவும். குன்மம் சூலைகளுக்கு மிளகு பொடியும் சாதமுங் கொடுப்பது கை கண்டது.

<u>ஆக்கிறுணம்</u>:-

பாரே நீ சிரசிலுள்ள நோயெல்லாம் போக பாடுகிறேன் ஆக்கிறு முப்பத்திரண்டு
ஆரே நீ சுண்டை வேர் சமுத்திராப் பழமும் அரத்தை சுக்கு அக்கிலாக் காரம்
அதிவிடையம், ஓமம்
கூறே நீ திப்பிலியும் திப்பிலி மூலம் குரோசாணி வாலுமிளகு, சித்திர மூலம்
காரே நீ கருஞ்சீரகம் கஸ்தூரி மஞ்சள், கடுகுரோகணி பெருங்காயம் கண்ட திப்பிலியே.

திப்பிலியும் சாம்பிராணி பேரரத்தை நிமான அலிஞ்சி வேர் வெப்பாலரிசி கடுகு
செப்பாதே பெருக்கிலை மேல் சுணையுங் கூட்டி திறமாக வகை வகைக்கு களஞ்சி
கூட்டு
கப்படியே சுதவளை கண்டங் காலி கடுகான மிளகரணை வெள்ளைச் சாறணை வேர்
ஒப்பரிய பெருமருந்து பங்கம் பாளை உத்தாமணி யோடும் கடலிருஞ்சி பொன்னை
யென்னவே கத வேளை குப்பை மேனி யிவை தனிலே வகை வகைக்கு களஞ்சி கூட்டி
விண்வே அத்திப் பால் வெள்ளாட்டு நீரும் விட்டுலத்தி இடித்துத் தூள் சீலை வடி
கொண்டு
என்னவே பெட்டியட சிமிளில் வைத்து யில்லாட்டால் பேய்ச் சுரையின் குடுக்கை தனி
லடைத்து
பன்னவே பணவிடை தூள் நாசிக்கேற்றப் பறிபோல நோயெல்லாம் பறந்து போமே.

போமென்ற பொடியதனை கடுதாசி தன்னில் புகட்டியே திரியாக்கித் திரித்துக் கொண்டு
தாமென்ற நிம்ப யெண்ணை கொளுத்தி யாத்தி நலமான புகையதனை நாசிக்கேத்த
ஒமென்ற கபால வாய்வு சூலை கரப்பனொடு கண்ணோவு கன்னப்புத்தே.

புத்தான பேரு வகைப் பீனிசமும் போகும் பொல்லாத சலதோஷம் புகை நீர்ப் பாச்சல்
கத்தான கபாலத்தில் விப்புருதி சூலை காசமொடு புன் புரையும் காணுதோடும்
மத்த முள்ளி நந்த நோய் செவி நோய் கண்ணோய் மகத்தான சன்னி வகை தோசந் தீரும்
சித்தான சிரசு நோய் தொண்ணூ த்தாறும் தீருமென்று பிரம்ம முனி செப்புவாரே.
செப்பியதோர் மானிடர்க்கு சன்னி தோஷம் சிறந்த தொரு பல்கிட்டு மூச்சடக்கமானால்
நம்பியே ஆக்கிரணம் பணவிடை தான் கொண்டு நவச்சாரம் பணவிடை தான் கல்ச் சுண்ணாம்
கொஞ்சம்
நம்பியே மத்தித்து நாசிக்கேத்த நாடாத பல்க்கிட்டு சன்னி தீரும்
ஒப்பில யின்னமொரு சேதி கேளும் உத்தமதொரு சடத்திலே ஆறாத புண்ணே.
புண்ணென்ன மேகத்தி லெழுந்த ரோகம் புரையோடி யாறாத புண்ணுக் கெல்லாம்
அன்னென்ன ஆக்கிரணம் களஞ்சி கட்டி அரிதாரம் சாதிலிங்கம் ரச கற்பூரம்
கண்ணே நீ கொடிக் கள்ளிப் பட்டைத் தாரும் கழுதை லத்தித் தான் கலந்து கட்டு
விண்ணென்ன வகை வகைக்கு களஞ்சி கட்டு விரவிடு நீ திருகு கள்ளிப் பால் தான் சுட்டி
விட்டதனை அரைத்துலத்தி வைக்கக் கொண்டு விதமான புங்கு புளி தனில் ரெண்டோட்டில்
விட்டதின் மேலதனிலே பொடியைப் போட்டு மேலான கண் சிரட்டை கொண்டு மூடி
விட்டதனை வியாதியின் மேல் புகையைக் கொள்ளு வெடிசூலை மேக வெடி கிரந்தி யரை
யாப்பு
திட்டமுடன் பவுத்திரமும் அழுகண்ணி குஷ்டம் தீராத களிப்புண்கள் தீருந் தானே.
தீருமென்ற பொடி யதனை யருளிப் பாலில் சேர்த்து நீ மத்தித்துச் சீலையிலே ட்டி
ஆறவென்ற ஆறாத புன் மேலே போடு அழுகி விழு கிரந்திருதி வாழை தீருமே குஷ்டமொரு
கறை நோய் புண்ணும் பிரேகத்தி லெழுந்த தொரு நோயக் கெல்லாம்
காரு நீ கண் காணுதோடும் பாரு கடுசான பத்தியந் தான் கண்டு கொள்ளே.
கண்டு கொள்ளு மூன்று நாள் புகை தான் விட்டு கண்டிப்பாய் பத்தியந் காணும் நாள் காரு
சென்றுதான் யேளா நாள் தலைக்கு நீர் வார்த்து சிறப்பான உப்பதனை வறுத்து கட்டு
முண்டு செய்யா மறுபடியும் விளக்கெண்ணை தேய்த்து முழுகிய பின் மத்த தெல்லா மூண்டு
தேறு
சென்று வரும் புகை வேக மென்ன சொல்வேன் தீராத நோயெல்லாந் தீரும் பாரே.

<u>உதையா வீரத் தாண்டவ மாத்திரை</u>:-

ஆடு தின்னாப் பாளை யிலை, மஞ்சள், திரிகடுகு, மரமஞ்சள், வாய்விளங்கம், முத்தக் காசு, அதிவிடையம், இந்துப்பு, கொடிவேலி வேர், மலைதாங்கி வேர், சன்ன லவுங்கப் பட்டை, கோஷ்டம், கடுக்காய் இது சமன் சேர்த்து நீர் விட்டு அரைத்து உருண்டை பண்ணி சகல சுரத்துக்கும் கொடுக்கவும்.

<u>சன்னிக்கு கலிங்கம்</u>:-

வேப்பம் பருப்பு, சீயக்காய் விதை, மிளகு இது வெல்லாம் சமன் கூட்டி பழச் சாறு விட்டு அரைத்துக் கயறு பண்ணி வைத்துக் கொண்டு எந்த வகைச் சன்னிக்கும் முலைப் பாலில் வெத்திலைச் சாத்திலிடவும்.

<u>கிரந்திப் புண்ணுக்கு</u>:-

வெள்ளைப் பண்டுபலம்.௨, மிளகு பலம்.௨, கொடிக் கள்ளி, நரிக் கொருந்து, சிள்ளி நேகு அரைத்துப் பச்சைத் தண்ணீரில் கரைத்துக் கொடுக்கத் தீரும் வியாதி ஒட்டுப் புண்ணு கிரந்திப் புண்ணு, அரையாப்பு, சூலை வீக்கம், வெடிப்புத் தீரும். பத்தியம் இச்சா பத்தியம்.

<u>வெள்ளைக்கு எண்ணை: தந்தி மேகத்துக்கு லேகியம்</u>:-

வில்வ யிலைச் சாறுவவாங்கி நல்லெண்ணை சேர் கால் கலந்து மூன்று நாள் கொடுக்கவும். வெள்ளை விழுகிறது நிற்கும்.

(வேறு)

(வேறு)

தேத்தாங் கொட்டை கழுநீரில் போட்டு நன்று ஊற வைத்து உரஞ்சிக் கழுவிப் போட்டு மூன்று நாளூற வைத்து எடுத்துப் பிழிந்து நடுவே இருக்கி நஞ்சை எடுத்துப் போட்டு நாழு படி பாலில் போட்டுக் கால் படியாகக் காய்ச்சி தின்னத் தீரும்.

<u>மேகத்தின் பேரில் வெள்ளை கண்டால் மருந்து</u>:-

கத்தாழைச் சாறு படி.3/4, விழுதி யிலைச் சாறு படி.3/4, வில்வச் சாறு படி.3/4 எலுமிச்சம் பழச் சாறு படி முக்கால் எருள்ளிச் சாறு படி.க, ஆடையில்லாமல் காய்ச்சி வடி கட்டின பால் படி முக்கால், சித்தாமணக் கெண்ணை படி.க இதக்கு கலக்கம் சாதிக்காய், விராகனிடை.3, முந்திரிப் பழம் விராகனிடை.3, கோரோசனை விராகனிடை.க, குங்குமம் பூ விராகனிடை.½, வெட்டி வேர் விராகனிடை.3, விலாமிச்ச வேர் விராகனிடை.3, சமுத்திராப் பழம் விராகனிடை.3, பேரீச்சம் பழம் விராகனிடை.3, கருஞ்சீரகம் விராகனிடை.3, சிறு நாகப்பூ விராகனிடை.3, கோஷ்டம் விராகனிடை.3 இது வெல்லாம் பொடி செய்து போட்டுப் பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு ஏழு நாள் அரைக்கால் சேர் திட்டம் கொடுத்து வரவும். பத்தியம் கெட்டியா யிருக்கவும். தீழ்

<u>பேதிக்கு மருந்து</u>:-

கடுக்காய், சுக்கு, இந்துப்பு, கல்மதம், தண்ணீர் வார்த்து அரைத்துக் கொடுக்கப் பேதியாகும்.

<u>வெங்காரக் கட்டு</u>:-

வெங்காரம் கட்டியாய்க் கொண்டு வந்து சங்க வேர் கொண்டு வந்து சாறு வாங்கி மூன்று நாளூற வைத்து அதை எடுத்து சட்டி காய வைத்து சட்டியில் வைத்து முருங்கைக் கொம்பு கொண்டு வந்து வட்டமாய் நறுக்கி அந்த வெங்காரத்தின் மேல் வைத்து அமுக்கப் பொரியாது.

<u>வியாக்கிற பதஞ்சலி அருளிச் செய்த கல்ப சூஸ்திரம்</u>:-

1. தரணி தனில் வியாக்கிரமர் நாமக்குள்ளே தயவு வைத்துச் சீஷருக்கு அறிக்கை செய்வார்
வாறு மலியுஞ் சோதி மிகு தமக்கமாக வாசி யெனு முப்பொருளு முறுவாறாக
சீவனியுங் காயத்தில் நோய்கள் தீர தெளிவாக நரை திரையு மறப் போக
காரணமாய் மைந்தர்களே சொல்லக் கேளும் கற்பத்தின் வகை யேது உரைக்கிறேனே.

2. உரைக்கிறேன் தண்ணீர் விட்டான் கிழங்கு பலம் நாலு உந்ததொரு நெருஞ்சி வித்து பலமோ மூன்று
நிரைக்கிறேன் சீந்தி வித்துப் பலமோ நாலு நிலப்பனையின் கிழங்கது தான் பலமோ மூன்று
வரைக்கிறேன் சித்திரத்தின் மூலம் மூன்று வகையாக கார்போக அரிசி மூன்று
பரைக்கிறேன் கெந்தகத்தின் சத்தி மூன்று பருவமா யாறு வகை கட்டிக் கொள்ளே.

3. கொள்ளே தான் நிழல் படவே உலர்த்தல் செய்து கொண்டிடித்துச் சூரணத்தை வடிவு செய்து
அள்ளே தான் சூரணத்தின் பாதி தேனும் அதில் பாதி தேனும் நெய்யுங் கூட்டி
விள்ளே தான் புதுப் பாண்டத் தடைத்துக் கொண்டு வெரு கடியாய் ஒரு பொழுது மண்டலந்தான் உண்டு பாரு
உள்ளே நானின்ற தொரு கபத்தைச் சாடி ஒடிந்து போகுமப்பா ரோக மெல்லாம்.

4. ரோக மென்றல் நோய் தீர்க்கு---ரோக மென்று லெத்தனையோ சொல்லப் போறோம்
நகர்ந்த மதிப் பிள்ளையப்பா கேளு கேளு ரோக மென்று லெத்தனையோ அனந்தங் கோடி
நொடிக்கு முன்னே ரோக மெல்லாம் பறந்து போகும் ரோக மென்று லெத்தனையோ விணைகள் போக்கும் நகர்ந்த மதி போலிருந்து வாழ்வார் தானே.

5. தானென்ற உடலுக்குள் வினைகளற்றுல் சாதகத்திற் காய சித்தி சித்தியாகும்
வானென்ற ஆக்கினையில் கபங்கள் போகும் வாழுதியா முப் பொருளுந் லக்கமாகும்
ஓனென்ற வாசியது உரைக்கின் கற்பம் யேனை மதி போகாதே சொன்னேனப்பா
கோனென்ற மீசனங்கே வார்த்தை சொல்வார் கட்டியங்கே அவரோடே வாசி யேத்தே.

6. எத்தப்பா வாசியல்லோ அப்போ யேறும் யேத்தி விட்ட மிடமெல்லாம் வாசியேறும்
சுத்தனப்பா மறைந்தோடி அய்வர் தாமும் சூடி போக்கி ஒன்றாக வாழுவார்கள்
நித்தனப்பா மீசனங்கே வார்த்தை பேசி நிலைத்தது தேகமப்பா அனேகம் கோடி
முத்தனப்பா தேவருக்குத் தேவனுசி மூனி காலமெல்லா மிருப்பார் காணே.

7. கானிந்த உலகு தன்னில் சிவயோகஞ் செய்வார் காணுர் களிக் கருவைச் சொல்ல வேண்டாம்
பூனிந்த யெந்தனுட கற்பமப்பா பகராதே யாவருக்கு முரைக்க வேண்டாம்
தோணிந்த கற்பத்தி லனேகம் சித்தி தொகுத்தவர் தான் பதஞ்சலியார் யானுள்க் கொண்டேன்
வீனிந்த கற்பத்தை தள்ளிவிக்கால் வேறுபடா வேறுபடா ரோகமது மாறுதென்றே.

8. என்றே தான் மைந்தர்களே புண்ணு பாரு யிலங்குமப்பா ஒராண்டில் பொன் போல் தேகம்
சென்றே தான் வாசியது கட்டிக் கொள்ளும் சிறந்ததொரு புமி நீரால் ரசத்தைக் கட்டும்
முன்றே தான் காயமது அருணுளும் உள்ளியதோர் காலகத யிருக்கும் தேகம்
நன்றே தான் யெந்தனுட குளிரத்திரத்தில் நாலுரைத்த கற்பமிது கொண்டு தேறே.

வியாக்கிர பதஞ்சலியார் கற்ப முற்றும்.

****

<u>வேதியாக மருந்து</u>:-

சீயக்காய் சுட்டெடை.உ, கடுக்காய்.க இது இரண்டையும் அரைத்து பச்சை வெண்ணெயில் கலந்து தண்ணீரில் கொடுக்க வேதியாகும். அது மீறினும் முழங்காலுக்கு தண்ணீர் விட்டுக் கழுவவும்.

<u>வெட்டை சூட்டுக்கு மருந்து</u>:- சாஸ்திர வேதி, பேய்ப் பாகல் கிழங்கு, அரைத்து மோராவது, தயிராவது கலந்து கொடுக்கத் தீரும்.

<u>சளி விழுந்து கிருநீர் கடுத்தால்</u>:-

விடத் தலாந் தழையும், சீரகம், ஈர வெங்காயம் இது மூன்றையும் அரைத்து எருமைத் தயிரில் கொடுக்கவும் தீரும். காட்டுக் கொட்டைப் பாலும், அரைப்ப, புண்ணுக்குப் பூடுச் சாறும் அரைப்படி எருமைத் தயிரில் அரைப்படி சீரகம், ஈர வெங்காயம் இது வெல்லாம் கலந்து கொடுக்கவும். ஐந்து நாள் கொடுக்கவும். ஏழு நாள் பத்திய மிருக்கவும். இது திட்டம்.

<u>கல்லடைப்பானுக்கு மருந்து</u>:-

வெங்கன் கல் சீருத்தி கொண்டு வந்து மிளகு பிரமாணமாக உடைத்து ஒரு படி கல்லெடுத்து சட்டியிலிட்டு சிவக்க வறுத்து பெரு வழையான சுக்கொன்று போட்டு ஒரு செம்பு தண்ணீர் விட்டுக் காய்ச்சி ஒரு படி தண்ணீராக்கி வைத்துக் கொண்டு இரத்தக் கொடுக்கவும். ரொம்பக் கஷ்டமானால் தயிருஞ் சோறும் கொடுக்கவும். கல்லடைப்புத் தீரும்.

<u>குஷ்ட வாய்வுக்கு</u>:-

கூறிய சுண்ணம்பை யெடுத்து சுண்டைக்காய் பிரமாணம் மூன்று உருண்டை செய்து குத்தித் தழையைக் கொண்டு வந்து அரைத்து மூன்று உருண்டை செய்து நடுவே துவாரம் பண்ணி துவாரத்திலே பசுவின் வெண்ணெயை போட்டு சுண்ணம்பு உருண்டையும் போட்டு மூடி மேல் பசுவின் வெண்ணெயைப் பூசி அதின் மேல் அரைத்ததைப் பூசித் தழையைப் போத்தி அதின் பேரில் எருமைச் சாணியைப் போத்தி நடுவே வைத்து எரு முட்டையை அடுக்கி நெருப்பு மூட்டி வைத்து வேக விட்டு அதை எடுத்து வெள்ளாட்டுப் பால் விட்டுக் கலந்து கொடுக்க வியாதி தீரும்.

பிள்ளை இல்லாதவர்களுக்கு மருந்து :-

பாப்பைத் தழுதலைக் கொண்டு வந்து நல்ல சீரகம் கலந்து அரைத்து தயிரில் கொடுக்கவும். ஆனை நெருஞ்சித் தழையும், ஈர வெங்காயமும், சீரகம் மூன்றையும் அரைத்துப் புளித் தண்ணீரில் கொடுக்கவும். நிலவகத்தித் தழையைக் கொண்டு வந்து வறக்கம்பரிசியி லிடித்துக் களிக் கிளறிக் கொடுக்கவும். பிள்ளை யாகும்.

பிள்ளைகளுக்கு கடுப்புக் கண்டால் :-

ஊளன் கொழுந்து கால் துட்டெடை கருகும் அரைத்து வார்க்க கடுப்புத் தீரும்.

மாந்தக் குளிகை :- வேலிப் பருத்திக் கொழுந்து ஒரு பிடி, சங்கன் கொழுந்து ஒரு பிடி [illegible] கொளிஞ்சிக் கொழுந்து ஒரு பிடி விடரந் தழை ஒரு பிடி, முடக் கொத்தான் கொழுந்து ஒரு பிடி தகரை தழை ஒரு பிடி பொருமித் தழை ஒரு பிடி பொடி தழை ஒரு பிடி கரியாந்தகரை ஒரு பிடி, கில்லிக் கொழுந்து பிடி.½, நரியால பொரி யரிசியிலை ஒரு பிடி பாகல் கொழுந்து பிடி.க, பீர்க்கங் கொழுந்து பிடி.½, ஊரவரைக் கொழுந்து பிடி.½, சுரைக் கொழுந்து பிடி.½, கள்ளிக் கொழுந்து பிடி.½, முள்ளிக் கொழுந்து பிடி.½, ஆலங் கொழுந்து பிடி.½, இசக்கு - சுத்தம் முத்தி- இதுவெல்லாம் கட்டி வதக்கி வைத்துக் கொண்டு இதுக்கு சுத்தம் முத்தின நல்ல பொருமி வேர் கொண்டு வந்து அந்த வேரை உப்பில் ஒரு புடம் செம்பில் ஒரு புடம் திப்பிலியில் ஒரு புடம் சுக்கிலொரு புடம் ஓமத்திலொரு புடம், இப்படிப் புடம் பண்ணி ஐந்து விராகனெடை யிட்டம் பட்டை தட்டிக் கொண்டு வந்து இதுக்குச் சுத்த வகை சாதிக்காய் விராகனிடை.க, சாதிபத்திரி விராகனிடை முக்கால் லவங்கம் விராகனிடை.க சுக்கு விராகனிடை.க, மிளகு விராகனிடை.2, திப்பிலி விராகனிடை.உ, ஓமம் விராகனிடை.8, குரோசாணிஓமம் விராகனிடை.3/4, பெருங்காயம் விராகனிடை.உ, வசம்பு விராகனிடை.2 3/4, வெள் வெங்காயம் விராகனிடை.2, கருஞ்சீரகம் விராகனிடை.3/ , வின்னையோடு விராகனிடை.3/4, விளாஒரு விராகனிடை.3/4 இதுவெல்லாம் வறுத்துப் பொடி செய்து இந்தப் பொடியும் முன் சொன்ன தழையும் புடம் பண்ணின பட்டையும் ஒன்றாய்க் கட்டி வெந்நீர் விட்டு நன்று அரைத்து குன்றி மணிப் பிரமாணம் உருண்டை பண்ணி வெய்யிலில் உலர்த்தி வைத்துக் கொண்டு கொள்கிற போது வெந்நீரில் கொள்ளக் கட்டு மாந்தந் தீரும். முலைப் பாலில் கொள்ள ஒரு மாந்தந் தீரும். இது எந்த மாந்தத்துக்கு மாகும் கை கண்டது.

மலட்டு புழு விழ மருந்து :-

சாதிக்காய், கிராம்பு, சதிரக் கள்ளிச் சோறு இது மூன்றும் ஒக்கக் கலந்து பொடி செய்து எண்ணெயில் எரித்து வைத்துக் கொண்டு நாலா நாள் துவக்கி மூன்று நாள் நக்கவும். மலட்டுப் புழு விழுந்து போம்.

கக்குவானுக்கு :-

வௌவால் தின்ற பழம் என்ன பழமானாலும் சரி கீழே கிடக்கிற பழத்தை எடுத்து வந்து முள்ளிக் காயளவு அரைத்து இள வெந்நீரில் கொடுக்கவும்.

இன்னுமொரு மருந்து :- கண்டங் கத்திரியைச் சமூலமுந் தலைத்து சாறு பிழிந்து கொடுக்கவும் தீரும்.

மலட்டுப் புழு விழ மருந்து :-

தும்பை ஒரு பிடி கொண்டு வந்து கால்படி பசுவின் பாலில் கரைத்துச் சர்க்கரை கலந்து கடக்கசே போன மூன்று நாள் உதிர மாறு முன்னே கொடுக்க மலட்டுப் புழு விழும். அந்தப் புழுவை எண்ணிக் கொள்ளப் புழுக் கொரு பிள்ளை உண்டாகும். இது திட்டம்.

ஒருத் தலை வலிக்கு மருந்து:- 27.2.64.

மிளகு, மஞ்சள், எருக்கிலம் பாலுடனே கலந்து வெய்யிலில் வைத்து உலத்திப் பொடி செய்து ஒரு சீலையாவது கடுதாசியாவது சுட்டித் திரித்து விளக்கில் பிடித்து இந்தப் புகையை நாசியிலேத்த நோக்காடு நிற்கும். இது கைகண்டது.

ஒருத் தலை வலிக்கு நசியம்:-

மாதளம் வேரு ஒருக் கொட்டைப் புன்கு உள்ளி, வசம்பு, நசுக்கி நசியம் செ நிற்கும்.

எலு நாயிக்கு:- வேப்பம் விரையும், கல்லுப்பும் அரைத்து உள்ளுக்கு கொடுத்து மேலுக்கும் பூச எலு நாயது போகும்.

சொக்கு மருந்து:-

நாய்ப் பாகல் விரையும், கரிக் குருவி மயிரும் கருக்கி அமத்தஞ் சாத்தில் பிசறி மேலே போட மயக்கந் தீரும். பசுவின் பால் விட்டுப் பிசறி வீட்டின் மேலே போடக் காக்காய் தின்னத் தீரும்.

பதினெட்டு வகை குஉட்டத்துக்கு:-

சுருகு விராகனிடை.3, நெல்லிக்காய்.7, தானிக்காய்.உ, கையாந்தகரை சாறு படி.3/4, எட்டு நாலுறப் போட்டு வைத்து பிறனிச் தோலை வாங்கிப் போட்டு முன் அந்தச் சாத்திலரைத்து சாற்றிலா நிலை மருந்தை அந்தச் சாற்றிலரைத்து இது இரண் கட்டி கையாந்தகரைச் சாற்றில் குடிக்க பதினெட்டுக் குஉட்டமும் தீரும். இது கை கண்டது.

சிறு நீரில் உதிரம் விழுந்தால் மருந்து:-

நெருஞ்சி விரையை இள நீரிலரைத்துக் குடிக்க மாறும். செங்கத்தாரி வி யைப் பசுவின் பாலில் வெல்லங் கூட்டித் தின்னவும். ஜுரம். பத்தியம் உப்பு, புளி ஆகா அறுகம் வேரை அரைத்து பசுவின் பாலில் மூன்று நாள் குடிக்கவும். உப்பு, புளி ஆகா.

நிலவாகை கற்பம்:-

நிலவாகைக்கு காப்புக் கட்டிப் பலியிட்டுப் பிடுங்கி வந்து உலத்திப் பொடி செய்து சீலை வடி கொண்டு வைத்துக் கொள்ளவும். இந்தப் பொடியைத் தேனில் கொள்ள உடம்பு மெலியும். நெய்யில் கொள்ள உடம்பு பருக்கும். எண்ணெயில் கொ நீரிப் புழு விழும். மோரில் கொள்ளச் சொரியாக் குஉட்டந் தீரும். கோமூத்திரத்தில் குடிக்கச் சிரங்கு தீரும். வெள்ளாட்டு நீரில் குடிக்க அக்குஉட்டந் தீரும். எருமை சா கத்து நீரில் குடி பாண்டு ரோகந் தீரும். எருமைப் பாலில் குடிக்க மருந்தீடு தீரும். எருமைப் பாலில் குழைத்துண்ணக் கடி விஷம் தீரும். பாகலிலைச் சாற்றில் குடிக்கச் செய்யான் கடி தீரும். குப்பை மேனிச் சாற்றில் பூசத் தேள் கடி தீரும். எருக்கிலை பழுப்புச் சாற்றில் குடிக்கப் பெருச்சாளி கடி தீரும். வேப்பஞ் சாற்றில் குடிக்க செவுடன் கடி தீரும்.

வயத்து வலிக்கு மருந்து:-

அவுரி யிலை கோவைக் கிழங்கு பழுபாகல் கிழங்கு இது மூன்றும் உலர்த்தி இடித்து வயறு வலிக்கிற போது பாலில் குடிக்கத் தீரும்.

விரோசனம்:-

நிலையாவாகரை யிலை நாழி, கழுநீர் நாழி, சுடக் கட்டி அதை நாழிய காய்ச்சி உப்புப் போடாமல் இரண்டகப்பைச் சாறு அகத்தி யிலைக் கறியுடனே கொள்ளவும். விடிய இரண்டு நாழிகை எல்லத் தொடுத்து வயறு கழியும். அதனமாறு சோற்றில் மோர் வார்த்து மிளகு பொடி போட்டு அசனம் பண்ணவும். பாக்குத் தின்னலாம். [illegible]

எரி குன்மம், வலி குன்மம், குடல் பிரட்டு இதுகளுக்கு மருந்து:-

முற்றின தேங்காய் கண் திறந்து அதில் உப்புப் போட்டு எடுத்துலர்த்தி 60 சுருகு 20 மிளகு ஒரு பணவிடை சுக்கு கூடப் போட்டு பதினைந்து நாள் தின்னவும்

<u>வயத்தில் செத்த பிள்ளை விழ மருந்து</u> :-

பெருங்காயம், இந்துப்பு இது இரண்டும் அரைத்துக் கொடுக்க வயத்தில் செத்த பிள்ளை விழும்.

<u>சோளப் பயிர் தின்ற மாட்டுக்கு மருந்து</u> :-

அவுரி கொழுந்து, மிளகு, சுக்கு ஒருக் கொட்டைப் படு வெங்காயம் இது வெல்லாம் வாயில் போட்டுத் தின்ற உமிய உடனே எழுந்திருக்கும். இது திடம்.

<u>நாலா மாறலுக்கு</u> :-

எழு மிளகு, எழு வெள்ளை வெங்காயப் பருப்பு, எழு சாறணைக்காய் மூன்று சாறணைக் கொழுந்து கூட்டி அரைத்து வென்னீரில் கலக்கி காச்சல் வருகிறபோது கொடுக்கவும். மற்ற நாள் குளிர் வருகிற போது அவனை அறியாமல் ஒரு குடந் தண்ணீர் ஊத்தவும். நிற்கும். இது கை கண்டது. நாற்த்தங் கொழுந்து, கடுகு, மிளகு, ஓமம், சுக்கு, வெள் வெங்காயம் இது வென்னீரிலரைத்து பச்சைப் பாக்கு அளவு உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு நாலா மாறலுக்கு இது வென்னீரிலரைத்துக் கொடுக்கவும். மாறல் காச்சல் தீரும்.

<u>ஒடு கரப்பானுக்கு மருந்து</u> :-

புளியறணைக் கிழங்கு முழு மஞ்சளும், வசம்பு, வெள் வெங்காயம் இது வெல்லாம் பசுவின் பால் விட்டரைத்து பசுவின் நெய்யில் கொதிக்க வைத்து உள்ளுக்கு கொடுத்து மேலுக்கு பூசத் தீரும். கடுகு வறுத்து பொட்டணமாகச் சீலையில் வடி கட்டி வீக்கத்தில் ஒற்றத் தீரும்.

<u>மாட்டு வியாதிக்கு மருந்து</u> :-

அரசம் பட்டை, ஆலம் பட்டை, கடப்பம் பட்டை, வேப்பம் பட்டை, பூவரசு யிலை சுண்டையிலை, பிரண்டை ஒரு பிடி, ஆவாரை மொட்டு யிலைக் கள்ளி வேர், திருகு கள்ளி வேர், நறு முன்னை வேர், மருக்காரை வேர், வெள்ளருகு சமூலம், சீந்திக் கொடி, கொடிவேலி வேர், கொத்தான் சமூலம், அரசன் சிராய், ஆவாரை வேர், ஆவாரங் கொழுந்து, முத்தெருக்கன் செடி சமூலம், முக்கொறட்டை வேர், மாம்பட்டை மருதம் பட்டை, ஆத்திப் பட்டை, சாறணை வேர், இலுப்பைப் பட்டை, நாவல் பட்டை, ஆயப் பட்டை, இது வெல்லாம் ஊறப் போட்டு வார்க்க மாட்டுப் பிணி தீரும். இது கை கண்டது. எந்த பிணியுந் தீரும்.

<u>பல் குத்துக்கு மருந்து</u> :-

சாறணைவேர், வேளை வேர், சிறுகீரை வேர் இது மூன்றும் அரைத்து அவரைப் பருப்பு மருவாதி சேர்த்து அதில் பத்து மிளகு இருபது புழுங்கலரிசியுங் கூட நருக்கி நெகத்தில் மேலே வைத்துப் போட்டு பல் குத்து தீரும்.

<u>தேவதாளிச் சூரணம்</u> :-

தேவதாளி சமூலமும் உலத்திப் பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தின்னப் பெருவயறு பாண்டு ரோகமுந் தீரும். காமாலை தீரும். (தேவதாளிச் சாறு, நெய்யும் தேனும் தவளை நெய்யுங் கூட்டிக் கொள்வது).

<u>வராகிக் கற்பம்</u> :-

வராகிக் கிழங்கு பன்றி முகத்தின் கிழங்கு நிலப்பனைக் கிழங்கு கொண்டு வந்து உலத்தி பொடி செய்து நெய்யில் கொள்ள இருமல் தீரும். என்ணெயில் குழைத்து விரலில் தடவ பவள வாயில் சுற்றிய மூல மெல்லாந் தீரும். என்ணெயில் முழுங்க நஞ்சு மீளும். இது வெல்லாங் கை கண்டது.

<u>சித்தர் ஒதையாச் சொன்னத் தயிலம் மேகம் இருவத்தொன்றுக்கு</u> :-

யிச்சிப் பட்டை, ஆலம் பட்டை, ஒதியம் பட்டை, மருதம் பட்டை,

அத்திப் பட்டை, மாம்பட்டை, நெல்லிப் பட்டை, நிலப்பனைக் கிழங்கு, பழம்பாசி, நன்னாரி வேர், கத்தாழை வேர், ஆவாரம் பட்டை ஆக வகைக்கு பலம்.5, இடித்து ஒரு பானையில் போட்டு எட்டு வள்ளத் தண்ணீர் விட்டு இரண்டு படியாகக் காய்ச்சி (மிக விருகிற சுரம்) தாழை விழுது சார் படி.உ, காடி படி.உ, பொன்னுங்கண்ணிச் சார் படி.உ, கத்தாளஞ் சார் படி.உ, தாளிச்சார் படி.உ, இந்த.ச சாறெல்லாம் கூட விட்டு நெய் படி. , நல்லெண்ணை படி. , தேங்காயெண்ணை படி.4 இது வெல்லாங் கலந்து தைலம் பண்ணி கொடுக்க மேகம் 21-ம் தீரும்.

<u>மண்டை குடை கபால வியாதிக்கு தயிலம்:-</u>

கருவேலம் பட்டை, கையாந்தகரைச் சார், கத்தாழைச் சார் குமட்டிச் சார் வகைக்கு படி.க, ஏலம், லவங்கப் பட்டை, அதிமதுரம், செங்கழநீர்க் கோஷ்டம், செண்பகப்பூ, சாதிக்காய், சிறதேக்கு, அரத்தை, தாளிக்காய், சாஸ்திரவேதி, கிராம்பு வகைக்கு விராகனிடை.5, இந்த மருந்தெல்லாம் கையாந்தகரைச் சார் விட்டு அரைத்து பசுவின் நெய், நல்லெண்ணை கலந்து முசுமுசுக்கைச் சார், தாளிச் சார், கொடுப்பைச் சார், நெல்லிக்காய்ச் சார் ஆக வகைக்கு படி.க, இது வெல்லாம் பாகமாய்க் கலந்து காய்ச்சி வடித்து தலைக்குத் தேய்த்து நாசிக்கு வார்த்து பகல் இருபது நாழிகை அளவில் சீயக்காயவது உசிலம் பட்டையாவது தேய்த்து முழுகவும். இதுக்குத் தீரும் வியாதி பீனிசம் மண்டை குடை கபால வாய்வு, கண்ணீர் நீர் விழுகிறது, மூக்கு நீர் விழுகிறது மண்டை வியா நேத்திர ரோகம் இது முதலானதுந் தீரும்.*ஊத

<u>வாத சன்னி, கை கால் முடக்குக்கு சாந்த தயிலம்:-</u>

நொச்சியிலைச் சாறு, பெருஞ்சாசும் எருக்கம் பால், வெள்ளாட்டுப் பால், நல்லெண்ணை மிவச்சாரம் வகைக்கு படி.க, இவை யெல்லாம் ரேசித்து கம்பிப் பிசின் வெள்ளை வெங்காயம் பலம்.க, அரைத்துக் கலந்து காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து பூசவும். இதுக்குத் தீரும் வியாதி பீனிசம், மண்டை குடை, கபால வாய்வு, கண்ணீர் நீர் விழுகிறது, மூக்கு நீர் விழுகிறது, மண்டை குழந்தைகள் மாந்த வலிப்பு, என்பது வாத சன்னி முடக்கு தீரும்.

<u>சறுவ பித்தத்துக்கு மகா பெருங்காதி தயிலம்:-</u>

பேய்ப்புடல், சீந்திக் கொடி, விஷ்ணுகாந்தி, பற்படாகம், கஞ்சங் கோரை கையாந்தகரை, சிறுகீரை வேர், பொன்னுங்கண்ணி நன்னாரி வேர், தாழை விழுது, மிண்ணி வேர், முசுமுசுக்கை வேர் இது வகைக்கு பலம்.த், நாலு மரக்கால் தண்ணீர் விட்டு குறுணியாகக் காய்ச்சி திப்பிலி மிளகு, தேவதாரம், செஞ்சந்தனம், சீரகம், சடாமஞ்சி, மரமஞ்சள், யேலம், லவுங்கப் பத்திரி, லவுங்கப் பட்டை, அதிமதுரம், செங்கழநீர்க் கோஷ்டம், செண்பகப்பு, சதகுப்பை, பூலாங்கிழங்கு, நாகப்பூ, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, வாய்விளங்கம், கொத்தமல்லி, குரோசாணி, ஓமம் கற்கடகசிங்கி, சித்தரத்தை, பேரரத்தை இவை யெல்லாம் குளி யெண்ணைக்கு விராகனிடை.க, கசாயத் துடனே அரைத்துப் போட்டு நெல்லிக்காய்ச் சாறு பசுவின் பால் முன்னுளி விலாமிச்சம் வேர், போட்டு பதத்தில் வடித்து தலைக்குத் தேய்க்கவும். பித்த ரோகத்துடனே கூடின பல வியாதியுந் தீரும்.

<u>சறுவ வண்டு கடிக்குத் தயிலம்:-</u>

வேப்பம் பட்டை விளாம்பட்டை, உசிலம் பட்டை, கருத்தப் புரசம் பட்டை, வெள்ளைப் புரசம் பட்டை, தேக்கஞ்சிராய் இது புடத்தில் தயிலம் வாங்கி தடவவும். உள்ளுக்குக் கொள்ளவும். சறுவ வண்டு கடியுந் தீரும். நிலக் குமிழிலை ஒரு படி தண்ணீரில் ஊற வைத்து மறுநாள் பிசைந்து சர்க்கரை கூட்டிக் கொடுக்கவும்.

<u>ரத்த பிரமியத்துக்கு மருந்து:-</u>

அருகம் வேரை அரைத்து பசுவின் வெண்ணையில் அரைத்துக் குழப்பி முழுங்கவும். சிறுபூளை சமூலம் பழ மோரிலிடித்து கருங் கொடி வெள்ளைக் கருப்பல் கருப்புட்டியும்

தின்னவும். விளாம் பிஞ்சு பசுவின் பாலில் குடிக்கவும்.

அரையாப்புக்கு:- நெல்லிக்காய் குங்கிலியம் பொடி செய்து வடி கட்டின தயிரில் பிசைந்து எலுமிச்சங் காயளவு அந்தி சந்தி இரண்டு வேளையுங் கொடுக்க கசிச்சல் நிற்கும்.

அரையாப்புக்கு:- சித்திர மூல வேர், எலுமிச்சம் பழமளவு நல்லெண்ணை வத்தி மெழுகு பதமா யெரித்து ஐ நாள் மூன்று கரண்டி கொடுக்கவும். கடுகு மூன்று நாள் கொடுக்கவும். கட்டியில் எண்ணை தடவவும்.

<u>பீனிசத்துக்கு:-</u>

பசுவின் நெய் சேர்.க, இஞ்சி பலம்.¼, சாம்பிராணி பலம்.½, கஸ்தூரி மஞ்சள் பலம்.½, குங்குமப்பூ பலம்.¼ இது வெல்லா மிடித்து நெய்யில் காய்ச்சி வைத்துக் கொண்டு அந்தி, சந்தி மூக்கிலே விடவும். பீனிசம் போகும். இதுக்குப் பத்தியம் புளியாகாது.

<u>ஈளை இருமலுக்கு சுவாச காசத்துக்கு மந்தார காசத்துக்கு:-</u>

கெந்தகம் பலம்.10, வெங்காரம் பலம்.10, பலகரை பலம்.20 இது மூன்றும் பழச் சாறு விட்டு அரைத்து வில்லை தட்டி அகலில் வைத்து மூடிச் சீலை மண் செய்து கெசபுடம் போடவும் பற்பமாம். அதை எடுத்து மிளகு வெதப்பி பொடி பண்ணி இருமலுள்ள பேருக்க புற்பம் ஒரு பணவிடையும், மிளகு ஒரு பணவிடையும் தேனில் கொடுக்கவும். ஈளை, இருமல், சுவாசகாசம், மந்தார காசம் இது வெல்லாம் தீரும். புளி ஆகாது. நெய், பால் கூட்டிக் கொள்ளவும்.

<u>படு தாமரைக்கு:-</u>

சமுத்திராப் பழம் (இடித்து) வஸ்திர காயம் பண்ணி வெருகடி தேனில் 12-நாள் கொள்ள உப்பில்லாமல் கொள்ளவும். வலமிசகிழல் நிலாவாரை அவித்து தண்ணீர் கொடுக்கவும்.

<u>சித்திரா லேகியம்:-</u>

புளியிலை பலம் 100, இரும்பு பிடித்த சிட்டம் பலம். 0, கொடிவேலி பலம்.25, யிஞ்சி பலம்.2 , சாறணை வேர் பலம்.6, செவ்வியம் பலம்.க, திப்பிலி பலம்.க, திரிமூலம் பலம். , (திரிமூலமாவது நெருஞ்சி கண்டங்கத்திரி சிறு வழுதலை பெருங்குமிழம் சித்தாமல்லி, பேராமல்லி) இவை கூட்டி இடித்து இரு ணவி நீர் விட்டு குழியாகக் காய்ச்சி கசாயம் வடி கொண்டு பழைய பனைவெல்லம் பலம்.100 கசாயத்தில் போட்டு குமட்டி இரத்தம் பழச் சாறு உழக்கு புளியாரைச் சார் உழக்கு இதில் விட்டு பாகு போலே காய்ச்சி இதுக்கு கற்கம் அசமதாகம், திரிகடுகு குரோசாணி, ஓமம், கிராம்பு, யேலரிசி, லவங்கப் பட்டை, இது பலம்.8 இந்த மருந்து 8 பலமும் லோக செந்தூரம் பலம்.3, மண்டூரம் பலம்.உ, கரிப்பான் சாறு படி.உ, இது வெல்லாங் கலந்து லேகிய பதத்தில் தேன் படி. , கூட்டி தானிய புடம் வைத்து புன்னைக் காயளவு கொள்ள பாண்டு, காமாலை, காசம், சுவாசம், குன்மம் நோவு, சகல பாண்டுவுந் தீரும்.

<u>இருமலுக்கு:-</u>

சுக்கு விராகனிடை.10, மிளகு விராகனிடை.க, தாமரைக் கிழங்கு விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, கோரைக் கிழங்கு விராகனிடை.க, சித்தரத்தை விராகனிடை.க, யேலம் விராகனிடை.க, சாதிக்காய் விராகனிடை.க, தாளிச பத்திரி விராகனிடை.5, லவங்கப் பட்டை விராகனிடை.உ இது வெல்லாம் சூரணம் பண்ணி அநுபானம் கொம்புத் தேனிலிடவும். பத்தியம் இச்சா பத்தியம்.

(வேறு)

கெவுரி பாஷாணம் அப்பிரக பற்பம், நாபி, மனோசிலை, நேர்வாளம் இவை சமன் கூட்டி மெதிபாகல் சார் விட்டு மூன்று நாளரைத்து அகலிலிட்டு மூடி சீலை மண் செய்து குக்கட பிடம் போடவும். ஆறவிட்டு எடுத்துக் கொண்டு இரண்டு சாமம்

பொடியாகப் பொடித்து வைத்துக் கொண்டு மணிப் பிரமாணம் பிஞ்சிச் சாத்திலிடவும். சுறவ சுரமும் தீரும். நேர்வாளம், சாதிலிங்கம் இது இரண்டும் சரி கூட்டி கொடிவேலி கசாயம் விட்டு அரைத்து தொள்ளாந்திரமா யெரித்து கெண்டை மீன் பிசசியிலே ஒரு சாமம் அரைத்து பின்பு கள்ளிப் பால் வார்த்து ஒரு சாமம் அரைத்து குன்றிப் பிரமாணம் உருட்டி பிஞ்சி சாத்திலிடச் சுர மெல்லாந் தீரும்.

காள_கண்ட_ரசம்:-

நாபி, மஞ்சிசிலை, கெந்தகம், வெங்காரம், திப்பிலி, ஜமத்தவிரை இது சமன் கூட்டி செருப்படைச் சாத்தில் ஒரு நாளரைத்து அகலிலிட்டு மண் செய்து கெஜ்ட புடமாகப் போடவும். ஆறின பிறகு எடுத்து கல்வத்திலிடுக் கள்ளிப் பால் ஒரு ஜாமம் மீன் பித்திலே ஒரு சாமம் அரைத்து கொண்டு மணிப் பிரமாணம் குளிகை பண்ணி அநுபானத்திலிட சுறவ சுரமுந் தீரும். பத்தியம் பருப்பும் சாதமும் கூட்டவும். தாகத்துக்கு கரப்பான் சாறு குளிர்ந்த தண்ணீர் கூட்டவும்.

ஆருதிக்_குள_லேகியம்:-

இஞ்சிச் சாறு படி.¼, பழைய வெல்லம் கொமட்டி மாதளம் பழச் சார் படி. இது வெல்லாம் சீலை வடி கொண்டு பாகு பதமாய் வருகிற பக்குவத்தில் யேலம், லவங்கப் பட்டை, கிராம்பு, திரிகடுகு, கடுக்காய், வாய்விளங்கம், கருஞ்சீரகம், சித்திரமூலம், இது வகை ஒன்றுக்கு மூன்று காசிடை சூரணஞ் செய்து தூளாவிக் கிளறி லேகிய பதத்தில் இறக்கி ஆற விட்டு பிறகு கால் படி தேன் விட்டுக் கிளறி தினம் முள்ளிக் காயளவு தின்னவும். இதுக்குத் தீரும் வியாதி அக்கினி மந்தம், அரோசிகம், வீக்கம், விஷபாகம், சுவாச காசம் இது வெல்லாந் தீரும்.

பல_வியாதிக்கு_இஞ்சி_லேகியம்:-

இஞ்சி பலம்.50, தோல் போக்கிப் பஞ்சா இடித்துப் பிசைந்து வடி கொண்டு வெல்லம் பலம்.7, கூட்டிக் காய்ச்சவும். இதுக்குப் பதம் தன்னி கைய்யால் தொவைத் தால் ஒடிவ பதத்தி றக்கி ஆற வைத்து மேல் பொடி சிரிபாலை, அதிவிடையம், சித்திர மூலம், யேலம், வாலுகம், திரிகடுகு, சிறுமூலம், யெவச்சாரம், லவங்கம், கருஞ்சீரகம், இந்துப்பு, ஓமம், கல்லுப்பு, வெடியப்பு, கற்சடகசிங்கி, வாளவரிசி, வெட்பாலை, யிரும் பின் பழைய கிட்டம் இவை வகைக்கு களஞ்சிப் பொடி செய்து குளம்பில்க் கூட்டி தேன்.உ, விட்டுக் குழைத்து பளங் கலசத்தில் வைத்து நாள் தோறும் தின்ன கிருனி சோகம், கிரந்த பாண்டுவகை, கை கால் வீக்கம், பீலிகை, நீராம்பல், குளிர்ச்சை, இருமல், கொடிய ரோகம், காமாலை இது வெல்லாந் தீரும்.

வச்சிர_வல்லி_லேகியம்:-

சீனக்காரம், யெவச்சாரம், சவுக்காரம், வெங்காரம்,நவாச்சாரம், இந்துப்பு, நற்சீரகம், கருஞ்சீரகம், திரிகடுகு, திப்பிலி மூலம், ஓமம், அதிகவிடையம், வெப்பாலை அரிசி, விளாவரிசி, வாலுளுவை, அரிசி, பெருங்காயம், கோஷ்டம், இவை வகைக்கு களஞ்சி இரண்டு பின் லையுடம மிளகு பலம்3/4, வெந்தயம், பலம்.3/ , வெள்ளுள்ளி 30 இவை யெல்லாம் இள வறுப்பாய் செய்து வஸ்திர காயம் பண்ணி முடக் கொத்தான் சார் பிறண்டைச் சார் பேய்க் தும்பைச் சார் நாளி, வெள்ளை நொச்சிச் சார் பலம். , சாறு நாளியாகக் காய்ச்சி அதில் சூரணம் போட்டுக் கிளறி மணக் கெண்ணை அதுக்குத் தக்கது வார்த்துக் கிளறி கடுகு பதத்திலிறக்கி ஒரு நாளைக்கு சுண்டைக் காயளவு கொள்ளத் தீரும் வியாதி வாய்வு, பொருமல், யிரச்சல் பொருமல் அசீரணம், அக்கினி மந்தம், வயறு களிச்சல், குடல் படுவான் வெள்ளைடைப்பு ஒளிச்ச குன்மம் தீரும். பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

குக்குளாதி_லேகியம்:-

வேப்பம் பட்டை, ஆடாதோடை, சீந்தி தண்டு, பேய்ப்புடல், கண்டங்கத்திரி, வேர் இவை வகைக்கு பலம்.10, யிருனாளி நீர் விட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து இந்தக் கசாயத்தில் நெய் விட்டு இதுக்கு கற்கம் வட்டத் திருப்பி வேர், தேவதாரம்,

விளாவரிசி, வட்டத் திப்பிலி, செவ்வள்ளிக் கொடி யெவாச்சாரம், நவாச்சாரம், மராவைச் சிங்கை, மஞ்சள், சதகுப்பை, கடுகுரோகணி கோஷ்டம், வாலுளுவை, நன்னாரி வேர், மிளகு, அசமதாகம், வெப்பாலை அரிசி, கொடிவேலி வேர், கொட்டை வசம்பு, செருமூலம், அதிவிடையம், கொத்தமல்லி வகை ஒன்றுக்கு பலம்.க, சுத்தி பண்ணின குங்கிலியம் பலம்.5, அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்துக் கொள்ளவும். இதற்குத் தீரும் வியாதி நீர்ப் பாச்சல், மார் நோக்காடு, பாண்டு ரோகம், விப்புருதி சுரோணித வாதம் இவை யெல்லாந் தீரும்.

<u>உஷ்ணத்துக்கு எண்ணை:-</u>

நெல்லிப்பருப்பு பலம்.க, நல்ல சீரகம் பலம்.½, கடுகுரோகணி பலம் ½, கொத்தமல்லி பலம்.3/4, தாளை விழுதுச் சார் பசுவின் பால் கடை மருந்து.

<u>பூத கலிக்கம்:-</u>

கரடி பத்து, ஆண் முயல் பத்து, பன்றி பத்து, முதலைப் பத்து, இது நாலும் கணவன் மிளகு ஊறப் போட்டு ஊறின பிற்பாடு எடுத்து எட்டிக் கொட்டை .3, பரு மிளகு.50 இது வெல்லாம் பச்சை யிஞ்சி சாற்றில் ஒரு சாமம் அரைத்து குளிகை செய்து நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு ஈர வெங்காயச் சாற்றிலுரைத்திடவும். பேய் பூதம் சன்னி பறந்து போகும்.

<u>ரெத்தப் பிரமியத்துக்கு:-</u>

புளியம் பட்டை, உரலில் போட்டு பசுவின் பால் வார்த்து ஊற வைத்து பிழிந்து கொண்டு அதிலே யேலம், சீரகம், அதிமதுரம் இது மூன்றும் வகைக்கு விராகனிடை.க, பொடி பண்ணி அதிலே போடவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். உப்பு இல்லாமல் பத்தியம் மூன்று நாள் பிடிக்கவும் தீரும்.

<u>நீர்க் கட்டுக்கு:-</u>

நீரில் கத்தாளையை யிடித்து கால் படி சாறு பிழிந்து கொண்டு அதிலே திரி கடுகு வெள்ளுள்ளி வெங்காரம் விராகனிடை.¼ முன் சொன்ன வகை நாலும் விராகனிடை.க அந்தச் சார் விட்டரைத்து அந்தச் சாற்றில் கலக்கிக் கொடுக்கவும். நீர்க் கட்டு நிற்கும். இது கை கண்டது.

<u>மேகப் புண்ணுக்கு:-</u>

சங்க வேர்ப் பட்டை சேர்.க, வெட்டி வேர் சேர்.½, கஸ்தூரி மஞ்சள் சேர்.¼, வளையலுப்பு சேர்1/8, இந்துப்பு சேர்1/8, கல்நார் சேர்¼, வளையலுப்பு சேர்1/8, சாம்பிராணி.¼, வால் மிளகு சேர்½ இவை யெல்லாம் சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு அந்தி சந்தி விராகனெடை கொள்ளவும். அரை மண்டலங் கொண்டால் தீரும் வியாதி ரசக் கட்டு, மேகங்கள் வெள்ளை விழுகிறது தீரும். பத்தியம் புளி தள்ளவும்.

<u>வயற்று நோவுக்கு:-</u>

முக்காவேளை சமூலம் யிடித்துச் சூரணம் செய்து கால் பலம் வெந்நீரில் மத்திச்சு கொடுக்கவும். மூன்று நாள் அந்தி சந்தி இரண்டு வேளையும் கொடுக்கவும். தீரும் வியாதி வயத்து நோவு தீரும். இந்துலவணம் யெவச்சாரம் இது இரண்டும் ¼ பலம் வெந்நீரில் கலந்து கொடுக்கவும் தீரும். பெருங்காயம், சயிந்தலவணம், யெவாச்சாரம், சுக்கு வகைக்கு விராகனிடை.க, வெந்நீரிலரைத்துக் குளப்பிச் கொடுக்க தீரும்.

<u>மார் வலிக்கு:-</u>

சண்டங்கத்திரி வேர், சுக்கு இவ இரண்டும் அரைத்துக் கொடுக்க நோவு தீரும்.

வயத்தாலே வாயாலே ரெத்தம் விழுகிறதுக்கு:- கலைமான் கொம்பு கொண்டு வந்து எலுமிச்சம் பழச் சாற்றிலே சந்தனம் போலே அரைத்து தேனில் குளப்பி 3

கொடுக்க வாயாலே ரெத்தம் விழுகிறது தீரும்.

தாது புஷ்டிக்கு:-

நெருஞ்சிக்காய் பலம்.½, ஆலங்கொழுந்து பலம்.½, இது இரண்டையும் பசுவின் பால் விட்டரைத்து அதிலே குளப்பி சர்க்கரை பலம்.க, போட்டு சோறு தின்ற பிறகு பாலில் கரைத்துக் கொடுக்கவும். சாதிக்காய், கொண்டு வந்து பசுவின் பாலில் அரைத்துக் குடிக்கவும்.

தாது புஷ்டிக்கு:-

சாதிக்காயைக் கொண்டு வந்து துளைத்து அதிலே யிங்கிலிகம் அடைத்து அதை எலுமிச்சம் பழத்துக்குள்ளே வைத்து மூடிச் சீலை மண் செய்து புடம் போட்டு சாதிக்காயை யெடுத்து அரைத்து ஐந்து மாத்திரை செய்து கொண்டு 2 வேளையும் ஒரு மாத்திரை தின்றால் தாது புஷ்டியாகும்.

மாலைக் கண்ணுக்கு:-

புங்கந் தழையைப் பச்சைத் தண்ணீரில் அரைத்துக் கண்ணுக்கு போட்டால் மாலை கண்ணு வாங்கும்.

மிளகு வெத்திலைச் சாத்திலரைத்து ஒரு வெத்திலைக்குத் தடவி புகைச் சுருட்டுப் போல் சுருட்டி விளக்கிலே கொளுத்தி சாம்பலை யெடுத்து வெத்திலைச் சாத்தில் குழப்பிக் கண்ணுக்கு இடவும். தான்றிக்காய் பருப்பு, மிளகு, நெல்லி யிலைக் கொழுந்து ரத்தம், அதிமதுரம், இது சரியாகக் கொண்டு பச்சைத் தண்ணீர் வார்த்தரைத்து உருண்டை செய்து சரி நிறை கொண்டு பச்சைத் தண்ணீரிலரைத்து கண்ணுக்கு பதினொரு நாள் போடவும். பூ விழுந்து போகும்.

பல் வலிக்கு:-

கோவைத் தழை, ஓமம், இரண்டையு மரைத்து உருண்டையாய் வாயிலடக்கி கொள்ளவும். பல் வலி நிற்கும்.

வங்க சுண்ணம்:- வங்கம் சேர்.க, கொண்டு வந்து, கத்தாழைச் சாற்றிலுருக்கி சாய்த்துப் பிறகு ஆவாரையிலை யரைத்து அதின் மேல், நெல்லிக் காயரைத்துத் தாள் பண்ணி அந்த அடைமேல் தாளித் தாவி மேலடை மூடி மூன்று சீலை மண் செய்து கெசபுடம் போட பற்பமாம். அந்த பற்பமெடுத்து திரிகடுகு பொடி செய்து நெய் விட்டு லேகியம் பண்ணி பன்றி பற்பம் பலம்.க, போட்டு தேன் விட்டு கடலைப் பிரமாணம் 21 உருண்டை சாப்பிடவும். மேகம் 21-ம் தீரும். புத்திரருண்டாம்.

அப்பிரக பற்பம்:-

அப்பிரகம் வேண்டியது கொண்டு வந்து பனைவெல்லமும் வெடியுப்பும் தண்ணீர் விட்டுக் கரைத்து அப்பிரகம் பிசறி அகலில் வைத்துச் சீலை மண் செய்து கெசபுடம் போட பற்பமாகும்.

நாக பற்பம்:-

நாகம் கொண்டு வந்து கல்கண்டு உரைத்து தடவி ஓட்டில் வைத்து சீலை செய்து கெசபுடம் போட பற்பமாம்.

அண்டச் சுண்ணம்:-

அவிந்த அண்டம் வேணுமென்றது கொண்டு வந்து உப்புத் தண்ணீரில் போட்டு சவ்வு போக்கி நன்றாய்க் காய வைத்து அதில் நிறையப் பழச் சார் விட்டு நாற்பது நாள் வைக்கவும். அதை எடுத்துக் குகுவையில்ப் போட்டுச் சீலை மண் செய்து கெசபுடம் போடவும். சுண்ணமாகும்.

சுரமாத்திரை:-

லவங்கம் விராகனிடை.க, அதிமதுரம் விராகனிடை.க, கோஷ்டம் விராகனிடை. சாஸ்திர வேதி விராகனிடை.க, சாதிலிங்கம் விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, அரத்தை விராகனிடை.க, கோரோசனை விராகனிடை.க, நற்சீரகம் விராகனிடை.க,

மிளகு விராகனிடை.க, வாளம் விராகனிடை.[illegible], பழச்சார் விட்டரைத்து வைத்துக் கொள்ளவும். ரசம் விராகனிடை.க, நெல்லிக்காய்க் கெந்தகம் விராகனிடை.க, கருங்குங்கிலியம் விராகனிடை.க, துத்தம் அரிசு விராகனிடை.க, கஞ்சாயிலைச் சார் விட்டரைத்து உருட்டி வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை: ரசம் விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, அரிதாரம் விராகனிடை. , மயேசிலை விராகனிடை.5, பாகலிலைச் சார் விட்டரைத்துக் கொள்ளவும்.

<u>பிளவைக்கு:-</u>

கோதும்பை அரிசியை அரைத்து பசுவின் பால் விட்டுப் பிசைந்து இரண்டு ரொட்டி சுட்டு ஒரு ரொட்டி மேல் விராகனிடை நாபி, பசுவின் பால் விட்டரைத்து அந்த ரொட்டிக்கு மேல்ப் பூசி அந்தப் புண் மேலே தேன் தடவி திரிச் சீலை திரிச்சுப் போட்டு அந்தி சாய அந்தத் திரிச் சீலை யெடுத்துப் போட்டு வெந்நீர் விட்டுக் கழுவி துணியால் துடைத்து அதின் மேல் நாவி தடவின ரொட்டியை வைத்து அதின் மேல் பாவட்டையிலை அரைத்து பூசி சிவப்புத் துணியால் பிடித்துக் கட்டிப் போடவும். காலமே அவிழ்த்து தண்ணீரில் போட்டுப் பார்த்தால் புழு விழும். இப்படி 5 நாள் கட்டப் புழுச் சாகும். புண்ணும் ஆறும். இதுக்கு மூலம் தேன் மெழுகு பலம்.¼, பால் துத்தம் வெள்ளைக்குங்கிலியம் லிங்கிலிகம் இது வெல்லாம் பொடி செய்து நல்லெண்ணெயில் காய்ச்சி இந்த மருந்தெல்லாம் தண்ணீரிலே விட்டால் அடை போலே படியும். அதை எடுத்து சிலந்திக்கு போடவும்.

<u>தாளகக் கட்டு:-</u>

தாளகம் கொண்டு வந்து சுண்ணாம்பில் சுத்தி பண்ணிக் கொண்டு அதை எடுத்து பிரம மருக காசிப் பூண்டுச் சாறு சுறுக்குக் கொடுக்கவும். பிறகு நீர் முள்ளிச் சாறு சுறுக்குக் கொடுக்கவும். கொட்டைக் கரந்தைச் சார் சுறுக்கு கொடுத்து பிறகு எடுத்து வைத்துக் கொண்டு சன்னி சுரம் கொடுப்பது பற்பமாக வேணுமென்றால் ரஸ்தாளி பழச் சாறு விட்டு அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து ஓட்டில் வைத்து சீலை மண் செய்து புடத்தில் போட பற்பமாகும்.

<u>துருசு சுண்ணம்:-</u>

துருசி கொண்டு வந்து வேலிப் பருத்திச் சாறு வாங்கி வைத்து 3 நாள் வைத்த எழா நாள் வெய்யிலில் வைக்கப் பற்பமாகும். இது சகல ரோகங்களுக்கும் ஆகும். அனுபானம் அறிந்து கொடுக்கவும்.

<u>லேபனத்துக்கு:-</u>

திப்பிலி, கிராம்பு, சங்கம் பழச் சாறு விட்டு அரைத்து கண்டில் பூசவும்.

தாளகபற்பம்:- பூசனியிலை கொண்டு வந்து உப்பு தண்ணீரிலே அண்டம் ஊற வைத்து சவ்வு எடுத்துப் போட்டு தாளகமும் அண்டமும் சமன் கட்டிக் கல்வத்திலிட்டு வெள்ளைப் பூண்டு தயிலம் விட்டரைத்து சின்ன வில்லை செய்து குடுவையில் வைத்துச் சீலை மண் செய்து புடம் போட பற்பமாகும். அதை எடுத்து வைத்துக் கொண்டு வியாதி அறிந்து கொடுக்கவும்.

<u>ரெத்தினக் குளம்பு:-</u>

வாளம் பலம்.க, சித்து முத்து பலம்.க, பூரம் விராகனிடை.க, லிங்கம் விராகனிடை.க, வெங்காரம் விராகனிடை.க, இது வெல்லாம் அரைத்துச் சிமிழில் வைக்கவும்.

அண்ட வாதத்துக்கு:- விளக்கெண்ணெ சேர்.க, மஞ்சள் பலம்.¼, கஸ்தூரி மஞ்சள் பலம்.¼, பூண்டு பலம்.2, கோரோசனை பலம்.¼, காயம் பலம்.¼ கசாச்சிப் பருப்பு பலம்.¼, இவை யெல்லாம் வஸ்திர காயம் பண்ணி எண்ணையில் போட்டுக் கிண்டி இறக்கச்சே கோழி முட்டை உடைத்து வைத்துக் கொண்டு ஒரு பாக்களவு எடு

நாள் சாப்பிடவும். பத்தியம் உப்பு, புளி ஆகாது.

காதில் ஈ விழுந்தால்:- இந்துப்பு விராகனிடை.க, வெள்ளாட்டுக் கோமியத்திலரைப் போட்டு காதில் பிழியத் தீரும்.

வயறுகளிச்சலுக்கு:- முள்ளழுவம் பட்டைச் சாறும் மிளகு பொடியும் எருமைத் தயிரும் கூட்டிக் கொடுக்கக் களிச்சல் நிற்கும்.

கரப்பு மூலம்: சபேதா விராகனிடை.க, தேன் மெழுகு விராகனிடை.க, சுத்த நல்லெண்ணை கால் சேரில் போட்டுக் காச்சவும். மெழுகு ஒட்டுகிற பதத்திலிறக்கி வைத்துக் கொள்ளவும். கட்டிகள் புண்களுக்கு துணியிலிட்டு கத்தரித்துப் போடவும் ஆறும். கட்டியும் கரையும்.

முறைக் காச்சலுக்கு:-

நாளி வேர்ப் பட்டை பலம்.உ, கல்வத்திலிட்டு ஐம்பது பழச் சாறு விட்டு வத்த வத்த விட்டரைத்து கடலை அளவு உருட்டி நிழலுலர்த்திக் கொண்டு சுக்கு கசாயத்தில் அரைத்து சுரத்துக் கெல்லாம் ஒரு மாத்திரை கொடுக்கவும். அறிந்து செய்ய வேண்டியது.

வலிப்புத் தோஷம் சன்னிக்கு நாள்:-

நாபி, திரிகடுகு, நல்ல எருக்கம் விரை இது ஐந்தும் ஒரு எடை நாவியைச் சுத்தி செய்து கொள்ளவும். இது ஐந்து மருந்து கல்வத்திலிட்டு இரண்டு சாமம் பொடி செய்து வைத்துக் கொண்டு இரண்டு நாசிக்கும் ஊதவும். தீரும் வியாதி சன்னி தோஷம், சன்னி வாதம், வலிப்பு, காக்காய் வலிப்பு, மகோதரத்துக்கு 8 வாதத்துக்கு சிலேற்பனத்துக்கு நாசியில் வைத்து ஊதவும். பாம்பு விஷத்துக்கு மாகும்.

நீரடைத்து மெத்தப் பிரயாசைப் பட்டால்:-

கடுக்காய்.8 இளநீரிலரைத்து அரைக் காசிடை பெருங்காயம் கூட்டி கொடுக்க வயறு பேதிச்சு நீர் விழும். இப்படி மூன்று நாள் கொள்ளவும்.

லிங்கக் கட்டு

உப்பு மண்ணை பழச் சாறு விட்டு அரைத்து லிங்கத்துக்கு கவசம் கட்டிக் கத்தாழை மடலுக்குள்ளே வைத்து சீலை மண் செய்து ஒக்கிட புடமாக வைத்து எடுத்துப் பார்க்க லிங்கம் உருகிக் கட்டும்.

பேதி மருந்து:-

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய் இந்துப்பு, கடுகுரோகணி வகைக்கு காஞ்சிக வாளம் விராகனிடை.6, எலுமிச்சம் பழச் சாத்திலரைப்பு மிளகளவு கடலை அளவு சுக்கு கசாயத்தில் கொள்ளவும். பொரிச்ச ரசமும் சாதமும் ராவைக்கு சுக்கு, சீரகம் கசாயம்.

பூசுகிற எண்ணை:-

எருக்கம் பால் இரண்டு சிறங்கை நொச்சிச் சாறு இரண்டு சிறங்கை கோழி முட்டை மஞ்சள் கருவு.5, பேய்க்குமட்டிக் காய்.க, வெள்ளுள்ளி.20, புங்கு மிளகு10,5

(வேறு) சாப்பிடுகிற எண்ணை

பறங்கிப் பட்டை விராகனிடை.க, சுக்கு விராகனிடை.க, மிளகு விராகனிடை. வாளம் விராகனிடை.உ, ஏலரிசி விராகனிடை.1½, ரசகற்பூரம் விராகனிடை.½.
இவை யெல்லாம் பொடித்து அவிச்ச விளக்கெண்ணை படி இதில் கலந்து கலக்கி பழகின கலசத்தில் வார்த்து வேடுகட்டி சூரிய புடம் வைக்கவும். பெரியவர்களுக்கு உச்சிக் கரண்டியால் இரண்டு கரண்டி சிறியவர்க்கு உச்சிக் கரண்டியாலொரு கரண்டி கொடுக்கவும். வறட்சி, மாந்தம், பொருமல், சகலமுந் தீரும். பொரி மிளகு, நீர் சாதம் சாயந்திரம் சுக்கு சீரகம் கசாயம் சாப்பிடவும்.

பால சஞ்சீவி மாத்திரை:-

சூதம், கெந்தகம், வெங்காரம் வகைக்கு விராகனிடை.க, சுக்கு விராகனிடை. மிளகு விராகனிடை.½, இது வெல்லாம் கரப்பான் சாத்திலரைத்து குன்று மணி பிரமாணம் இரண்டு கடுகளவு மிளகளவு இரண்டு செய்து கொண்டு இதுக்கு அநுபானம் பால், சீரகம்,

கொத்தமல்லி, ஓமம் பாலில் இதனில் கொடுக்கவும். பொரி, மிளகு நீர் சாதம்.

கோரோசிலைக் குளிகை:-

கோரோசிலை, வெத்திலைக் காம்பு அக்கித் திப்பிலி, ஏலரிசி வகைக்கு விராகனிடை.க, முலைப் பாலில் கொத்தமல்லிப் பிரமாணம் மிளகு பிரமாணம் முலைப் பாலநுபானத்தில் பாலருக்கு பெரியவர்க்கு கொடுக்கவும். பித்த சுரத்துக்கு கசாயத் திலநுபானமாய் கொடுக்கவும். புளியில்லாமல் மிளகு நீர்ச் சாதம்.

ஊழ் சுருட்டைக்கு:-

கழல் கொடி வேரரைத்து உள்ளுக்கு கொடுத்து மேலுக்குப் பூசத் தீரும்.

எரி மண்டலிக்கு:-நீர்ப் புலாம் வேரரைத்து உள்ளுக்கு கொடுத்து மேலுக்கு பூசத் தீரும். சகல விஷத்துக்கு: மிளகு பத்து, அரசன் கிழங்கு வாயில் மென்று (மாறு பக்க மூயத் தீரும்) கோழி முட்டை சாராயத்தில் கலக்கிக் குடிக்க சகல விஷமுந் தீரும்.

நட்டுவாக் கலிக்கு:- மஞ்சள், பாக்கு வெத்திலை சுண்ணம்பு யிட்டு தின்ற சாத்தை இறக்கிப் பிறகு தம்பலத்தை முழுங்கத் தீரும்.

தேளுக்கு: மிளகறணை வேரரைத்துக் கொடுக்க மேலுக்கும் பூசவும்.

சகல விஷத்துக்கு:-

பேய் நாய், பேய் நரி, விரியன் கடி இதுக் கெல்லாம் புள்ளுக்குக் கீரையை அரைத்து கலந்திப் பிரமாணம் கொடுக்கத் தீரும்.

காதில் சீ வடிகிறதுக்கு:

இந்துப்பு தண்ணீர் விட்டு சுண்டக் காச்சிக் காதில் விடத் தீரும். குதிரை லத்தியைப் பிழிந்து காதில் குத்தவும் காது கேளாத யிரைச்சல் தீரும். பெருங்காயம் முலைப் பாலிலரைத்து காதில் தடவவும் காது கேட்கும்.

காதில் சீ விழுகிறதுக்கு:-

சுக்கு, மிளகு, இந்துப்பு, கோரைக் கிழங்கு காயம், வசம்பு, பூண்டு வகைக்கு விராகனிடை.க, நல்லெண்ணை படி கால், எருக்கம் பழுப்பு வாட்டிப் பிழிந்த சாறு 1/8, கொடிக் கள்ளி வாட்டிப் பிழிந்த சாறு 1/8, நன்று சுட்ட சரி ஒன்று மருந்துகளை யெல்லாம் நருக்கி எண்ணையில் போட்டு சாறு வகையும் விட்டு எரித்து வடித்து வைத்துக் கொண்டு காதில் குத்தி பஞ்சி சொண்டடைக்கவும்.

காதில் சீ வருகிறதுக்கு:-

கீழாநெல்லி வேர், நத்தைச் சூரி வேர், நாயிறவாளி வேர் வசம்பு வகைக்கு விராகனிடை. , வேப்பெண்ணை படி.$\frac{1}{4}$, வேர் வகையெல்லாம் நருக்கி எண்ணையில் போட்டுக் காய்ச்சி யிறக்துக் கொண்டு காதில் குத்தி அடைத்து வரக் குணமாம். கை கண்டது. குழந்தைகளுக்கும் பெரியோருக்கும் காதின் கீழ் வீக்கிமுல் கருஞ் சீரகத்தை அரைத்துப் பூசக் குணமாம்.

செவிப்படுவானுக்கு:-

வலம்புரிக்காய், வெளிச்சைப் பிசின் கடல் நுரை, கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், வேப்பம் பட்டை ஒருத் தலை பூடு, வசம்பு வகைக்கு விராகனிடை. , பொடி பண்ணி விளக்கெண்ணை படி.3/8, இதில் போட்டு கொரட்டைக் கிழங்கு எலுமிச்சங் காயளவு வேளை வேர்.க, அரைத்து எண்ணையில் போட்டுக் காய்ச்சி வடித்துக் கொண்டு செவியில் குத்திப் பஞ்சடைக்கவும். செவி மகா வீக்கமாகுந் தீரும்.

காது நோவுக்கு:-

வெத்திலைச் சாறு, மிளகு, இந்துப்பு தட்டிக் கொதிப்பித்துக் காதில் குத்தத் தீரும்.

சிலந்திகளுக்கு மருந்து:- சிலந்தியுடைய ஆணி பிடுங்கவும். ஆத்திப் போடவும். அரிசு பலம்.க, சுட்டு சாம்பல் பண்ணிக் கொண்டு அவ்வளவு மிளகு கூட்டி நன்றாய் பிசைந்து

வில் லை தட்டி வைத்துக் கொண்டு புண்ணின் வாயில் கட்டி வரவும் குணமாம்.

<u>பிளவை சிலந்தி பழுவன் புண்களுக்குடைய</u>:

குடி யொட்டிப் பால் எரியாலம் பால், உத்தாமணிப் பால் ஆலம் பால் அலரிப் பால், இவைகளில் ஒருவகைப் பால் தப்பாமல் விடாதே போடவும் தீரும்.

<u>சிலந்திகளுக்கு காரச் சீலை செய்கிற விபரம்</u>:-

கருகு விராகனிடை. , பொடி செய்து எலுமிச்சம் பழச் சாற்றில் போட்டுக் கிண்டி அடுப்பில் வைத்துக் காய்ச்சி மெல்லிய சீலையில் தலைத்து சிலந்திகளிலே உள்ளே போக வைத்தால் அறபற நாளிகையில் மடக்கி போகும். கை கண்டது.

(வேறு)

சுக்கு நக்கதச் சூரி சங்கு சுண்ணாம்பு முட்டை யோட்டிலிருக்கிற சவ்வு இது வெல்லாம் தண்ணீர் விடாமல் அரைத்து முகம் விடாமல் பத்து மேல் பத்து பூசி வர அவிந்து போகும்.

<u>சகல வியாதிக்கும் அரப்பாரவம்</u>:-

லிங்கம் விராகனிடை. $\frac{1}{2}$, வெங்காரம் விராகனிடை. $\frac{1}{4}$, சுக்கு ஒன்று, மிளகு. 9, அன்னம் வெருகடி

<u>சவ்வீரக் குழம்பு</u>:-

வாளம் விராகனிடை. 7, சவ்வீரம் விராகனிடை. க, திரிகடுகு வெங்காரம், ரச கற்பூரம் வகைக்கு விராகனிடை. க, இரைப்பு தேனிலரைக்கவும். குன்றிப் பிரமாணம் கொடுப்பது. இதுக்குத் தீரும் வியாதி சன்னி, வயத்து வலி, சூலை வாய்வு, சமஸ்தக்கக்கும் தேனி லநுபானம். பத்தியம் வெந்நீரும் சாதமும். உப்பு, புளி, தவிர்க்கவும். மேல் பத்தியம். மூன்று நாள் மருந்து பத்தியம் மூன்று நாள். ஏழா நாள் தண்ணீர் விடவும்.

<u>சவ்வீரக் குழம்பு</u>:-

சுக்கு விராகனிடை. உ, மிளகு விராகனிடை. க, கொடி முந்திரிப் பழம் விராகனிடை உ, வாளம் விராகனிடை. ., கல்கண்டு விராகனிடை. ச இது வெல்லாம் தேனில் மத்திக்கவும். தேத்தான் விரை அளவு பூ வந்திக் காயளவு கொடுப்பது சுக பேதியாம். பொரி, மிளகு நீர் சாதம் சாப்பிடவும்.

<u>குளிர் கசாயம்</u>:- சோம்பு, அதிமதுரம், முந்திரிப் பழம், சிறபாத்து குச்சி, கள்ளிச் சருகு அட்டு தட்டாய் நீர் மேல் நெருப்பு மாலா கோடா வேர் இலை வகைக்கு பலம். $\frac{1}{2}$, இடித்து ஆற பங்காய் பிரித்து அந்தி சந்தி மூன்று நாளாற பொழுது கசாயம் வைத்துக் கொடுக்கவும். மேல் பொடி நாகத் தாள் நேரத்துக்கு விராகனிடை. $\frac{1}{2}$, போட்டுக் கொடுக்கிறது. பத்தியம் மூன்று நாள் புளி, புகை யிலையாகாது. உப்பு ஆகாது.

<u>சன்னிக்குக் கடல</u>:-

வளையலுப்பு, இந்துப்பு, பெருங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலி, வெங்காரம் சமனரைத்து மிஞ்சிச் சாற்றில் குழப்பி நாக்கில் தடவக்குணமாம்.

<u>சன்னி சுரத்துக்கு</u>:-

முருங்கைப் பட்டை, மாவிலிங்கப் பட்டை எருக்கம் வேர்ப் பட்டை, நொச்சிப் பட்டை, சித்தரத்தை, சிறதேக்கு, சுக்கு வகைக்கு பலம். க, இடித்து சாற பிழிந்து சட்டி காய வைத்து முறித்து யிறத்துக் கொண்டு மேல் பொடி திப்பிலி கண்ட திப்பிலி, கோஷ்டம், அக்கிராக்காரம், கிராம்பு இவைகளெல்லாம் பொடி தூவிக் கொள்ளத் தீரும்.

<u>நேத்திர வாய்வுக்கு</u>:-

கருகு பலம். $\frac{1}{2}$, சங்கு பலம். $\frac{1}{2}$, முட்டையோடு பலம். $\frac{1}{2}$, கண்ணிலிடக் கண் வியாதி தீரும்.

<u>கண் பூவுக்கு: அணிப் பூவுக்கு</u>:

தும்பைச் சாற்றிலரைத்துப் போடவும் தீரும்.

கண் பவுக்கு:- சித்தா மணக்கு முத்து மூலைப் பாலிலரைத்து மூன்று நாள் கண்ணிலிடத் தீரும்.

கண் படலத்துக்கு:- சேத்தான் விரையை உரைத்துக் கண்ணிலிடத் தீரும்.

கண் வலியின் பேரில் பூ விழுந்தால்:- சீரகம் விராகனிடை.உ, பொடி செய்து நிம்பக் காயளவு பசு வெண்ணெயில் மத்தித்துக் கரண்டியில் போட்டு எரித்து இறக்கிக் கொண்டு பூக்கரை மிற மட்டும் கண்ணில் போடத் தீரும்.

சகல விஷத்துக்கும், பாம்புக்கும்:- அவுரி வேர் வெந்நீரிலரைத்து உள்ளுக்குங் கொடுத்து மேலுக்கும் பூசத் தீரும்.

கண்டன் கரு_வழலைக்கு:-

கருவேலம் பழத்தை அரைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசத் தீரும்.

புடையலுக்கு:- வட்டத் திருப்பி வேரரைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசத் தீரும்.

சீத மண்டலிக்கு:- வேப்பம் விரை அரைத்துக் கொடுத்து மேலுக்கும் பூசத் தீரும்.

உதிர மண்டலிக்கு:- மிளகரணை வேரை அரைத்து உள்ளுக்குங் கொடுத்து மேலுக்கும் பூசத் தீரும். கொம்பேறி மூக்கனுக்கு:- கெருடக் கொடி வேரரைத்து உள்ளுக்குங் கொடுத்து மேலுக்கும் பூசத் தீரும்.

அசீரண கசாயம்:- சுக்கு, திப்பிலி, காயம், சீந்தி, கண்டங் கத்திரி இவை சமன் கசாயம் வைத்து திப்பிலி மேல் பொடி தூவிக் கொள்ளக் குணமாம். இது கைகண்டது.

சுரது_சன்னிக்கும் கனிக்கும்:-

சுக்கு, வசம்பு, இந்துப்பு, மிளகு, திப்பிலி இதில் நிம்பைச் சாறு விட்டு அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு நல்லெண்ணெயாகுதல் எலுமிச்சம் பழச் சாற்றிலாகுதல் உரைத்துக் கண்ணிலிட பதின்மூன்று சன்னியுந் தீரும்.

சுர கலிக்கம்:- மிளகு விராகனிடை.க, சிராம்பு .5, சுக்கு விராகனிடை.3, இவை அரைத்து பயத்தங்காய் போலே உருட்டி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு

சேத்தும_சுரத்துக்கு:- சுக்கு, சீந்தி கொடிவேலி, பேய்ப்புடல் இவை சமன் கசாயம் வைத்துக் கொள்ள வாத சேத்தும சுரம் தீரும்.

தோஷ_சுரத்துக்கு:-

சுக்கு, பேய்ப்புடல், வெப்பாலை யரிசி, செந்தொட்டி, கோரைக் கிழங்கு, கோஷ்டம், சீந்தி ஆடாதோடை, பற்படாகம் இவை சமன் கசாயம் வைத்துக் கொள்ள தோஷ சுரந் தீரும்.

தோஷ_சுரத்துக்கு_கசாயம்:-

கல்லிச்சிப் பட்டை, நன்னாரி, கோரைக் கிழங்கு, பேய்ப்புடல், பேராமுட்டி, வில்வவேர், தூதுவிளங்கு, செவ்வள்ளி, செங்கழுநீர், சித்திர மூலம் இவை சமன் கசாயம் எட்டிலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கத் தோஷ சுரந் தீரும்.

சன்னி வாத சுரத்துக்கு:- ஆடா தோடை சீந்தி, நிலவேம்பு, பற்படாகம், சுக்கு, சிறுகாஞ்சொறி, சித்தாமுட்டி இவை வகைக்கு பலம்.க, கசாயம் வைத்துக் கொள்ள மூர்ச்சை மூர்ச்சை மயக்கம் சன்னி, வாத சுரம் குணமாம்.

தாப_சுர_கசாயம்:-

சந்தனக் கட்டை, விலாமிச்ச வேர், கோரைக் கிழங்கு, பர்திரி வேர், சிறுகாஞ்சொறி வேர், வெட்டி வேர், பற்படாகம் இவை சமன் கசாயம் வைத்துக் கொள்ள தாப சுரந் தீரும்.

மாந்தம்_சுளி_கணத்துக்கு_எண்ணெய்:- வேப்பெண்ணெய் சேர்.½, சித்தரத்தை பலம்.¼, கருஞ்சீரகம், கடுகுரோகணி, காயம், நேர்வாளம், கடுகு வகைக்கு விராகனிடை.க, பொடி செய்து எண்ணெயில் போட்டு பொங்கின பதத்திலிறக்கி பிள்ளை பலமறிந்து சீராய்க் கொடுக்கத் தீரும். கை கண்டது. உப்பு, புளி ஆகாது.

சன்னி_சுரம்,_தோஷ_சுரம்,_இசிவு_சஞ்சீவி_கசாயம்:-

சிறு குறிஞ்சா வேர் பெருங் குறிஞ்சா வேர், பொன்முசுட்டை வேர், ஆவாரை வேர், பெரு மருந்துக் கொடி இவை சமன் கசாயம் வைத்துக் கொடுக்கத் தீரும்.

<u>வாத சுரத்துக்கு பித்த சுரத்துக்கு கசாயம்:-</u> 28.2.64.

சீந்தி, சுக்கு, நன்னாரி, சிறிய சுக்கு தோடையுடன் பேய்ந்த நீரு நாழி விதமாய்க் காய்ச்சக் குடிப்பிராய் சார்ந்த பித்த வாதமுடன் தயங்கு சேத்துமம் அதிசாரம் ஆய்ந்த தாப சுரந் தீரும் அருதாரத்தி யெம்பதிலை தானே.

<u>வாத பித்த சுரத்துக்கு கசாயம்:-</u>

ஆமணக்கம் வேர், சீந்தி தழுதாழை வேர், சுக்கு, சுத்தல் குகம்பை, கோரைக் கிழங்கு. பாச்சோத்தி யிலை சமன் கசாயம் வைத்துக் கொள்ள வாத பித்த சுரந் தீரும்.

வெள்ளோக்காலத்துக்கு:- நத்தைச் சூரி வேரைத் காடியிலரைத்துக் கொடுக்கத் தீரும்.

இருமலுக்கு:- வில்வ வேர் விளாயிலைச் சாறு, தேன் கலந்து நாக்கில் தடவத் தீரும்.

பிள்ளை பிறந்த வயறு நோவுக்கு:- கொட்டாவி கொள்ளுகிறதுக்கு: பிள்ளைகளிரா திருந்தால் தீர் வயற்றில் பூச மருந்து:- வெள்ளரி விரையும், எலிப் புழுக்கையும் அரைத்துக் தீர் வயத்தில் பூசவும். வயறு விடும்.

<u>தக்கிவாதத்துக்கு:-</u> ஆடு தீண்டாபாளை சமூலம் உள்ளி, வசம்பு இவை நருக்கி நல்லெண்ணெயி லூற வைத்துக் கொண்டு உள்ளுக்குங் கொடுத்து தலையிலப்பி வைக்கவும்.

மாந்தம் வயறு விட:- சுத்தி பண்ணின நேர்வாளம் விராகனிடை.உ, ஏலம், கோஷ்டம், செண்பகப்பூ, அதிமதுரம், லவங்கப் பட்டை வகைக்கு விராகனிடை.உ, எலுமிச்சஞ்சாறு, விளகளவு உருண்டை செய்து அநுபானத்தில் கொடுக்கவும் வயறு விடும்.

<u>கை கால் பிடிப்புக்கு:-</u>

வடக்கே போற சங்க வேர் கொண்டு வந்து அரைத்து காராட்டுப் பாலில் கொடுக்க வாதசூலை, கட்டு சூலை, கடுப்பு சூலை பத்து நாள் கொடுக்கத் தீரும்.

<u>வாய்வுக்கு மருந்து:-</u>

நொச்சியிலை கொண்டு வந்து அரைத்து காராட்டுப் பாலில் கொடுக்க
நொச்சியிலை கொண்டு வந்து இரண்டு பிடியிலை பொன்னிறமாக வறுத்து இரண்டு பிடி ஓமம் வறுத்து தண்ணீர் வார்த்துக் காய்ச்சிக் கொடுக்க சகல வாய்வுந் தீரும்.

<u>பிள்ளைகள் அரைத்தேய போலக் கழிகிறதுக்கு:-</u>

ஒக்கைப் பேய்மிரட்டி யிலை கருஞ்சீரகம், ஓமம், லவங்கம், திப்பிலி வகைக்கு விராகனிடை.க, ஒரு மண்சட்டியில் போட்டு கசாயமிட்டு யிலை மருந்தை கசாயத்தி லரைத்து சுண்டைக்காய்ப் பிரமாணம் உருட்டி அந்தி சந்தி ஒரு உருண்டை வெந்நீரில் கொடுக்கவும் கவிச்சை தவிர்க்கவும்.

<u>பீனிச ரோக மென்பதுக்கு மருந்து:-</u>

பீனிச ரோகமாவது நாசியை அடைத்து மூளைய ய் தா ர்மாங்கிஷம் வளர்ந்து மூளை புறப்பட்டு யிருக்கும். தபல பீனிசம் நாசியை அடைத்திருக்கும் சேத்தும பீனிசம், சாக்காய் தண்ணீர் போலே விழும். யிருமலுண்டாயிருக்கும். ரோக பீனிசம் ரோகம் நாசி யிலே ரெத்தம் விழும். பிறற கனத்திருக்கும். தலை வலி உண்டாயிருக்கும். இந்த வகைக் கெல்லாம்

<u>நெய் நாசியில் விட விபரம்:-</u>

குங்குமப்பூ கோரோசனை அதிமதுரம், செங்கழுநீர் கட்டி ஒரு பணவிடை கஸ்தூரியும் கற்பூரமும், பொடி பண்ணி ஒரு படி பசுவின் நெய் மறுளக் காய்ச்சி காய்ந்த பதத்திலே நெய்யை யிறக்கிக் கொண்டு இந்தப் பொடியெல்லாம் போட்டு ஆவி வைத்துக் கொள்ள வும். இது நாசியில் அந்தி, சந்தி இரண்டு கரண்டி நெய் விடவும். பொரியவல் பொரியரிசி வாயிலடக்கிக் கொண்டு தலைகாணி போட்டு தலை தொங்க விட்டு நிற்கவும். ரோகந் தீரும்.

<u>பீனிசத்துக்கு தயிலம்:-</u>

சித்தரத்தை காசிரண்டு சதகுப்பை, காசி. , அதிமதுரம் காசி.10, மஞ்சள் காசி.10, வெந்தயம் காசி.4, செண்பகப்பூ காசி. , லவங்கப் பட்டை காசி.4,

சடைமஞ்சள் காசி.உ, வெப்பாலை அரிசி காசி.உ, ஏலம் காசி.உ, லவங்கப் பத்திரி காசி.உ, இவை புடஞ்சம் கெந்தகம்.கா.உ, யெல்லாம் இடித்து பசுவின் பாலி லரைத்து ஒரு பிடி சந்தலங் கட்டி அரைத்து இதில் சிந்தித் கண்டு சித்தரமட்டி, வெட்டி வேர், விலாமிச்ச வேர் இவை நறுக்கி இடித்து ஒரொன்று ஒரு பலம் நாலு படி தண்ணீர் போட்டு ஒரு படியாகக் காய்ச்சி அந்தக் சசாயம் வடித்து இரண்டுபடி நல்லெண்ணை நாலுபடி பசுவின் பால் வார்த்து அ பத்துக காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து இந்த எண்ணை நாலு நாளைக் கொருக்கால் தலைக்கிட்டு முழுகவும். நாசியிலகத்து வாங்கக் கொள்ளவும். இந்த போகமட்டும் முழுகவும். சிற பயறிட்டு முழுகவும்.

<u>கிரந்திக்கு மேகசூலை, மேகவாய்வு, மேக ரோகம், புண் அரையாப்புக்கு, பிடிப்புக்கு மருந்து:-</u>

ரசகற்பூரம் காசிடை.க, ரசசெந்தூரம் காசிடை.½, ஆடுதீண்டாப் பாளை வேர் காசிடை.1½ இது மூன்றும் கட்டி அரைத்து பதிலு உருண்டை செய்து ஏழு நாள் கொடுக்கவும் தீரும். இச்சா பத்தியம்.

<u>மேக சாந்திக்கு:-</u>

மருதயிலைக் கொழுந்து யேழெட்டுக் கொண்டு வந்து புதுச் சட்டியில் தண்ணீர் இதைப் போட்டு கல்கண்டு பலம்.க, பொடி பண்ணிப் போட்டு பனியில் வைத்து காலமே யிலையைக் கசக்கி தண்ணீரிலே பிழிந்து சிலப்பதளமாய் வரும். அதை யிறுத்துக் கொடுக்கவும். இச்சா பத்தியம்.

<u>சீத கவிச்சலுக்கு:-</u>

மாதளம் பிஞ்சு, சுக்கு, சாதிக்காய், சீரகம், லவங்கம், மாசிக்காய், கருஞ்சீரகம், சுடைக் கஞ்சா வகைக்கு சரியிடை மிளகுப் பிரமாணம் உருண்டை செய்து கொள்ளவும்.

<u>மதன காமேசுரம்:-</u>

சாதிக்காய் காசிடை.க, கிராம்பு காசிடை.½, அிரத்தை காசிடை.½, ஏலம் காசிடை.½, மிளகு காசிடை.2½, லவங்கப் பத்திரி காசிடை.2½, சிறுநாகப்பூ காசிடை.½ சுடைக்கஞ்சா காசிடை.10, பொன் வறுப்பாய் வறுத்து சூரணஞ் செய்து சர்க்கரை கட்டி தின்ன லேபமுண்டாம். இது கை கண்டது.

<u>லேபன புஷ்டிக்கு:-</u>

ஆவாரைப் பிசின் காட்டு முருங்கைப் பிசினம் கோதும்பை நெய், கசகசா, சாதிக்காய், வகைக்கு பலம்.உ, யேலம் பலம்.½, லவங்கம் பலம்.½, லவங்கப் பட்டை பலம்.½, பசுவின் நெய் பலம்.10, சர்க்கரை பலம்.20, தேங்காய்.உ, பால் பிழிந்து அந்தப் பாலில் இந்த மருந்தெல்லா மிடித்துப் போட்டு அல்வா போலே செய்து சுட்டு இறக்கி அந்தி மாம் ஒரு கறண்டிப் பிரமாணம் சாப்பிடவும். பால் கூட்ட லாம். கை கண்டது.

<u>புழு வெட்டுக்கு:-</u>

அருப்பிடித்த கலத்தில் சிறுபுள்ளடிச் சாறு வார்த்து தட்டாலே பிழைத்து வைத்துக் கொண்டு கன்னிவிடத் தீரும். கை கண்டது. பசுவின் வெண்ணை கூட்டிக் கன்னிவிடவும்.

<u>பிள்ளைகளுக்கு ரெத்தக் கவிச்சலுக்கு:-</u>

கடுக்காய், பிஞ்சு, புழுங்கலரிசியுங் கடப் போட்டு கருக வறுத்து சீரகமும் சிவக்க வறுத்துக் கொண்டு தண்ணீர் வார்த்து யேலம் நருக்கிப் போட்டுக் கசாயமிட்டு வார்க்கவுந் தீரும். பத்தியம் கவிச்சி தவிர்க்கவும்.

<u>பிள்ளைக் தாச்சிகளுக்கு கவிச்சல் கட்ட:-</u> தேங்காய்ப் பிஞ்சு இரண்டு வெங்காயம் இரண்டு பச்சை உமி பிடி, தத்தியிலை, வெந்தயம் பலம்.½, கசாயம் வைத்துக் கொடுக்கவும். கட்டும்.

கேருக பின்ளைக்கு என்ணை :-

சுண்டியிலையாவது, தொட்டால் சுருங்கியிலை விடத் தேரிலை வேளை தளகி அவுரி, கரிசிலாங்கண்ணி மொத்தக்காளி, களச்சியிலை, ஆக யிலை சமன் கூட்டி சாறு பிழிந்து சாறு ஆழாக்கு பசுவின் நெய் ஆழாக்கு கூட்டிக் கூட மருந்து கருஞ்சீரகம், சோஉட்டம், கடுகு ரோகனி கஸ்தூரி மஞ்சள் வகைக்கு விராகனிடை. க, பொடி பண்ணிப் போட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடித்து மேல் பொடி சாதிக்காய் லவங்கம் கோரோசனை, யேலம், சீரகம், வகைக்கு விராகனிடை. $\frac{1}{4}$, பொடி பண்ணிப் போட்டு பத்து நாள் வார்க்கத் தீரும்.

வாந்தி நிறுத்த :-

கடுக்காயுடனே, வெங்காரம் கூடிய சீனிக்காரமுடன் அடுக்காய் சீனி தேன் கூட்டி அதவே நிம்பச் சாத்தரைத்த தருசகாம் வாந்தி விட்டோடும் அவது நாக்கில் தோய்த்தாக்கால் சடக்கா யிந்தக் கிரகை தனை சகிராய்ச் செய்து முடிப்பீரே.

பிள்ளைகள் மாந்த வலிக்கு :-

அகத்தியிலைப் பருப்பு, உள்ளி, வசம்பு நருக்கி உள்ளுக்கு வார்த்து உச்சி மேல் உடம்பு யெல்லா மிட்டு தடவவும். பீர்க்கியிலையும், அகத்திப் பருப்பு உள்ளி, வசம்பு, நருக்கி உள்ளுக்கு வார்த்து மேலுக்குந் தடவி நருக்கி முழங்கையில் மருந்தைக் கட்டி வைக்கவும். பிட்டுடனே வலி நிற்கும். இசுக்குப் புகை பிடிக்கும்படி :- மாட்டுக் கொம்பு? கோழிறகு தலைமயிர் வடக்காரம் போட்டு அந்தப் பிள்ளைக்கு ஆசனத்திலும் புகை காட்டிச் சரீர மென்றும் புகை காட்டவும். உடனே தீரும்.

செவ்வாப்பு என்ணை :- என்ணையில் கலியான முருங்கைப் பட்டை, வசம்பு, உள்ளி நருக்கிப் போட்டு சூரிய புடம் வைத்து வார்க்கவும். பத்தியம் கலிச்சு, புளிப்புத் தவிர்க்கவும்.

போகர் வாகடம் :- அக்கிரமம் வெண்பா :-

1. ஆரியமாம் வாகடத்திறள்ப் பொருளை யாராய்ந்து
சீரியகோர் செந்தமிழால் செப்புகிறேன் கூரியகாம்
உள்ளி நீ கான் சிகிச்சை யோக விநாயகனே வள்ளலே யென் மனத்தங் வா.
2. வாசெலகே சேத்துமத்தில் வந்த விரந்தியமும்
போவெனவே நாவிடப் போகுமே பாலவேயாம்
வாக்கான பீனிசமும் மற்றுஞ் சளி தீரும்
ஆக்கிரமம் பண்ணரத்தையார்.
3. தலை வலிக்கு :-
அரத்தை சதகுப்பை சுக்கு ஆள நொச்சிச் சாத்தி
லரைத்திளக்கிச் காய்ச்சி யருந்தச் சிரத்தில் தலைவலியும் பீனிசமும் நன்று
நீரேத்தம் அலை அலைந்து போகுமென்க் கூற,

வாத சுரத்துக்கு :-

4. கூறரியா பாலட்டை கொண்ட சிக்கமுட்டியின் வேர்
வேறுள வேலிப்பருத்தியின் வேர் சீறுள
நல்மிளகு கூட்டு நலமாய்க் கசாயமிடில் செல்மயிலே வாதசுரம் செப்பு.
5. எரிவாதத்துக்கு :-
செப்பரிய பேரிலந்தை சேர்ந்த புளியாரை
யொப்புடனே காடியுடன்ரைத்து மெய்ப்பாக
மத்திட்டதைக் கடைந்து வந்த நுரை பூசிவிடல்
சுத்த மெரிவாத மில்லைத் தான்

உதிர வாய்வுக்கு :-

6. தர்வென்றும் வெள்ளுள்ளி தப்பா மதுப்பு மெத்தி
வேவென்று அக்கினியில் வேக வைத்து
நாவென்றும் பிட்ட வரைத்து வெந்த நீரைக் குடிக்கில்

7. <u>கல்லடைப்புக்கு</u>:-

மானே கேள் நீரடைக்கில் வாரும் பசறியிலை, தானே நற் கத்தரியிலை தன்னுடனே, ஆவ பனையின் வேர்க் கசாயமிட்டு மீதில் பொடி வெங்கார மிடில் கல்லுடைக்குங் காண்.

8. கக்கும் சிறுபுளை கார் நெருஞ்சி மாவிலிங்கு, விக்கும் பேராமுட்டி வேருடனே ஒக்கவே, கூட்டிக் கசாயமிட்டுக் கொள்ளவே கல்லடைப்பு காட்டிக் களன்று விழுங் காண்.

9. <u>அண்ட வாதத்துக்கு</u>:-

காணுமெது நாறனை பருழுங்காய் களாய்ப் பருப்பு, பூணுங் கொத்தாளுடனே போந்த சுக்கு, வேணுமேனைப் பண்ணிக் கசாயம் பருகிய பின், விங்கிலண்ட வாதம் போம் விட்டு.

<u>கிருணிக்கு</u>:-

10. விட்ட யொதியிர்க்கு மேவுங் கருவேப்பிர்க்கு, முட்டு சுக்கு சீரகமு மோதக முந் தண்டியிட்டு காய்ந்த கசாயங் கொள் காணும் சிறணை விசுளி பாய்ந்த கிருணியும் போம் பார்.

<u>பித்தத்துக்கு</u>:-

11. பாரிசைந்த நெல்லிமுள்ளி பண்பான குவிளையும், சீரிசைந்த சீரகமும் சேர்ந்த சுக்கு, வேறிசைந்த சித்தமுட்டி நெல்பொரியும், சீராய் கசாயமிடில் பித்தம் விட்டு போமிதனைப் பேசு.

<u>கிருமிக்கு</u>:-

12. பேசும் பிறண்டையுடன் பேரிசைந்த வேப்பலகு, பூசு புரசவித்து மோதகமும், வாசி பண்ணி கொள்ளிர் கசாயமிதில் குன்மவலி கிருமி விள்ளீர் விழுந்தேமிது.

<u>வீக்கத்துக்கு</u>:-

13. மீறவெதுங் கன்னி வேர் தன்னில் சுண்ணும்பேத்தி, போதவுந் தீயிற் புடமிட்டு ஓதியுன்னில் வீக்கம் பீலிகையுடனே மீற மக்கிளி மந்தம் பார்க்கப் பறந்து போம் பண்.

<u>பித்தத்துக்கு</u>:-

14. பண்ணும் பருத்தி விரை பாரிலுள்ள நெல் பொரியும், மென்னும் சிறுதிப்பிலியும் யேலமுடன், நன்னும் பொடி சர்க்கரையுந் தேனுமாகக் குழைத்துண்ண விக்கல் சத்தி போகும் விரும்பு.

15. <u>அஉந்ட குன்மத்துக்கு</u>:-

விரும்புகின்ற சீரகமும் மேன்மை பெறு நெல்லிமுள்ளி, பொருந்து சுக்கேலம் பொடி சரியாய், நிரம்பிடவே யெட்டிலொன்றாய் கசாயமிட்டுக் களஞ்சி கொள்ள, அஉந்ட குன்மம் போகுமலைந்து.

<u>அண்ட வாதத்துக்கு</u>:-

16. அலையுங் கருவிளை யிலார்க்கப் பொடி செய்து நிலையு மிளகு பொடி நேர் சரியாய் மலையில் பெருங்காயங் கூட்டி புண்ணைப் பேரண்ட வாதம் மருங்காய வாறு மடிந்து.

<u>எரிகுன்மத்துக்கு</u>:-

17. வாடுகின்ற யிந்துவுக்கு பாதி யெவச்சாரம், தேடுகின்ற காயமதில் செம்பாதி நாடுகின்ற செம்பிரச் சாத்தில் செலுத்தி செலுத்திய பின், வெம்பு மெறி குன்மம் போம் விரைந்து.

18. <u>சீதத்துக்கு</u>:.-

விரைந்து மிளகரைத்து வெள்ளிருடனே அருந்தப் புளியிலனங்கே, பொருந்தும் மலங் கிருமி சீதமுடன் மன்று மசீரணம் விசுளி பலநோவும் போகுமெனப் பேசு.

<u>சுவாச காசத்துக்கு</u>:-

19. பேசுமென்ற சங்கிலையும் பேய்ச் சுரையின் தன்னிலையும், வாசமுடன் பிட்டாக

கரப்பான் விக்கத்துக்கு:-

20. ஓடுகின்ற சாறனையும் உப்ப மறிதகியும், வாடுகின்ற சுக்கு வைய சூடுநீர், நாடி மறுக மறுக குடிக்கில் வாய்வு கரப்பான் விக்கம் பறகு பறக்கென்றேடும் பார்.

உட்காச்சலுக்கு:-

21. பாரிரோ நீர்ப் பிணிகள் பேயன் பழத்துடனே, சேரிரோ சர்க்கரையும் சீரகமும் நாரீரே உண்டாக்கால் போகாதோ உள்க் காச்சல் பிரமியங்கள் கண்டாக்கால் போகாதோ காண்.

22. **இருமலுக்கு:-**

கானீராடா தோடை கண்டங்காலி துளசி, பேனீர் பிட்டாய் பிளிந்த நீர், நாளியே கக்கு கக்கென்றிரும வீளை முதல் நோய்கள், பொக்குப் பொக்கென்றேடிப் போம்.

23. **ரெத்த பித்தத்துக்கு:-**

போதீருடா தோடை போந்த் தொரு முந்திரிகை சேதீர் நற்குடி நீர் செய்திடீர், மாதிரையாய் பெருங்காயங் கட்டி யருந்தீரருந்திய பின், நருகரைத்த ரெத்த பித்தம் மோடும்.

மூக்கில் ரத்தம் விழுகிறதற்கு:-

24. ஓடவே மாதளம் பூச் சாற்றிலும் பால் நெய், கூட வதனின் கொகுந்தரைத்து, நாடி மிகப் பார்த்து வடித்துப் பரிவாக மூக்கில் விட, சுத்த ரெத்தம் போகுமெனக் கூறு.

காச மரோசிகம்:-

25. கூறுகின்ற தாளிசை பத்திரி ஏமம் மிளகு , தேறுகின்ற நாகப்பூ திப்பிலியும், வீறுகின்ற கூகை நீரேல மிலவங்கந் தான் கட்டி பாகமாய் குரளத்தைப் பண்.

26. பண்ணிய பின்னக்காரம் பாகமாகக் கட்டி, உண்ணக் களிஞ்சி தேனெக்க விட்டு, தின்ன மாய் நாவிலிடக் காசமுதல், நன்னுய மரோசிகமும் பூவிடம் விட்டோடிப் போம்.

27. போமே கடு நெல்லி போற்றரிய தான்றி சிங்கி, யேம மதுரஞ் சிவ கோஉட்டம் யேலமுடன் ஆமாந் திரிகடுகு இந்தப்பு தேக்குங் கண்டங்காலி, மறிய யிடித்து வடி செய்

28. செய்த பொடியிலிஞ்சி சாறு தேன் சேர்த்திளைக்கில், பைய்யக் களஞ்சி பரிந்துள்ள வையகத்தின் குத்திக் குக்கியிருமுங் கொல்லு முப்பிசங்கரு ளெச்சல், தத்தித் தத்தி யோருந்தான்.

29. மூக்கில் ரெத்தம் காசமரோசிகம் யெரு நாயிரு யெலி கடி பஞ்ச காசம் காசம், தானே யடப்பம் விரை தப்பாமலே களஞ்சி மானே வெள்ளீர் தனில் வாங்கிடு, மானே யெரு நாயறு கிரந்தி யீளை யெலிகடிஞ் விருமே யென்னுரு மீதே வேண்டு.

30. வேண்டும் பெருங்காயம் வேலிப் பருத்திச் சார், ஆண்டு சென்ற ஆமணக்கு நெய்களில் பாண்ட மதில் யிட்டு வடிக்கன்னில் யீளை பஞ்ச காசமதில் விட்டோடிப் போகும் வெருண்டு.

31. வெருண்ட மிளகோர் மூன்று விரை யளிஞ்சிவெட்டு, திரண்ட பொடி களஞ்சி தேனிலுன்ன அருண்டு யிதில்ப் பட்டேன் பட்டேனென்று பஞ்ச சுவாச காசம் கெட்டேன் கெட்டேனப் போம் கேள்.

32. கேளுங் கையாந்தகரைச் சார் கீள்க் கடுக்காய், யாகு மந்த நல்லெண்ணையாற் கிளறி நாறு மெள்ளி பன்னீர் பதினஞ்சு சேத்துமத்தில் வந்த பிணி, சொன்னேன் கேள் மென் மொழியாள் அறு.

33. **சேத்தும வியாதி காச சுவாசம் யீளை யிளைப்புக்கு:-**

அாதவளையின் பழக்கின் சாறு சுத்த நெய் பாலும், தீயில் திரிகடுகு சீரகமும் மாதே கேள் கற கறென வெரும்பும் காச சுவாச மிளைப்பு, பறபறெனவே போகும் பார்.

34. பாறியதோர் நாற்த்தம் பழச் சாத்தில் திரியலேயும் தேறந் திப்பிலி மிளகு தேக்குடனே வீறு சிங்கி தேத்தாம் பழமரைத்து தேறுமதிற் கட்டி புன்ன மாத்தஞ் சுவாச காசமால்.

35. மாலாந் தோலடச் சாற வாத்காலி நெய் பாரும், சேலாந் திப்பிலி யானைத் திப்பிலியும் மேலாங் கொடி தன்னுடனே கூட்டி யவட்சாரம் வடிவாகவே வேகவை.

36. சுவாச காசத்துக்கு:-

வேக வைத்த நெய் கொள்ளில் மீற சுவாச காசம், பாக பிரத்த பித்தம் பார் பறியும் தேகத்தில் வந்த வலி மேகம் மற்ற மிகச் சுரமும், பிந்தி யென்றுதே போம் பிரிந்து.

37. பிரிந்த ளெநீரில் பின் முறையார் கூந்தல் லறிந்தே யதனை, வேறரைத்து செறிந் தன்ன மாலைச் சுரமு மவேக வாத பித்த சேத்துமத்தில் காச் சுரம் போம் குறுந்து.

38. குறுந்த வெள்ளைக் காக்கணத்தின் வேரும் குலமிளகு, மளந்த வெள்ளீரிலரைத்தருந்த தளர்ந்து மிகப் போமே யசீரணங்கள் போகுமே உதிரத்தில் நாமுரைக்க கேளுமே நன்று.

39. ஆரோக்கியம்: தோஷத்துக்கு, கரப்பானுக்கு, வாத கரப்பான் பித்த கரப்பான் சேத்தும கரப்பானுக்கு:-

நன்றாக வேர்ச் கொம்பு நாடுகின்ற ஓமமிலை ஒன்றாய்க் கசாயமிட்டுண்டு விடில் அன்றே தாமேறுமே மந்தம் ஒளியாமல் நாடு விட்டு வாடுமே கெட்டு மனம்.

40. மனமே கையாந்தகரைச் சாற மகிழ் நசியம், கண்மா விஷ ரோசிக மேலும் சிவமேக உப்புக் கரைத்து வெள்ளீரிலருந்த தப்பா விஷயரோசிகஞ் சபிக்கும்.

41. சபிக்கும் யிருப்புதலிக் தப்பாமலே காய்ச்சி யமுக்கும் வல் குதிக்குளமுத்தி, அமுக்கினமாய் சாற தோஷ விகளி தண்ணீர்த் தாகஞ் சுலை தீருமிது வெல்லாஞ் சிறந்து.

42. எல்லாக் கிரந்தி எருவாற வாத பித்தம், பொல்லாத சேத்துமத்தின் பொங் கியே, வில்லாகும் நீள் புருவத்தானே நிறைந்த கரப்பாறு, மேள் புருவத்தானே யியம்பு.

43. யியங்குந் திமிர் காச்சல் எங்கும் வீக்கந் திரட்சி, தயங்கு கறுக்கள் தருந் தானப்பா, முயங்கி வந்த மரைக் கணத்தில் வாத கரப்பான் வல்லஞ், செறந் தாமரை முகத்தாள் செப்பு.

44. செப்பத் தலை நெறத்து சேரும் காச்சல் திவவு, மொப்பாய்ச் செவந்தெரிந்துடல் தடிப்பாம், தப்பாமல் வாந்தி வரும் நீர் சிவக்கும் வந்த மலஞ் சிக்கி விடும் சேர்ந்த பித்தஞ் சேர் கரப்பான் திண்ணம்.

45. திண்ணஞ் சேற்றும கரப்பான் செய்யும் வகை நெஞ்சு கம்மல், பன்னுற வாயில் கிறந்தி பத்தி விடும், மெள்ளரிய மண்டை வலிக்கும் வளர் காதில் சீ யெடுக்கும், கெண்டை விழியுரைக்கக் கேள்.

46. கேளாய் குளிர் காச்சல் கிளரும் கிளர்வினை போல் வீங்கி, வற்ற புனம் லெங் குந் திமிர்க்கும் ஒதந் தோஷ கரப்பானுற்ற.

47. உற்ற அரி கரப்பானெக்கக் கேளொன்டொடியீர், மற்ற லிங்கம் யோனி குத்தம் வந்திடும் புண், சற்ற மெல்வ ஆறமல் புண் கரைக்கு மானே கருவளிக்கும், மாறுத யிக் குணத்தின் வாற..

48. வாற கொடிவேலி வன் குறிஞ்சா வெள்ளறகு, கூற கருவேம்பு புடசப் பாலை வீறஞ் சிவனார் பெருமருந்து செங்கத்தாரி மிளகு, யிலையே கொள் பல் கரப் பானைக.

49. ,பேளுஞ் கரிய நொச்சி பேறனிஞ்சி சாரணை, யாவுங் கரந்தை சின்னியா மணக்கு, பாகம் வடியீர் வசம்புள்ளி வாள் கடுகுரோகணியும், கோடுஞ் சீர் கரப்பான் கூற.

50. கூறஞ் செங்கத்தாரிப் பட்டை கூர் மிளகு, வீறஞ் சிற குறிஞ்சா வேர் கூட்டி, காரியமா யெள்ளியிடலே குடி நீரே கும்பல கரப்பான் தின்று விடலே போகுந் தின்.

51. **வீக்கத்துக்கு:-**

திரித்தாளி சங்கு சுரை சிறு நெருஞ்சி யிஞ்சி மனத்தால் நீர், முள்ளியுடன் மாமலையும், கனத்த வறில் வெங்கார மெனற பொடி விட்ட குடி நீரருந்த, கங்கார வீக்கம் போ போம் கார்.

52. **மல நிறுப்புக்கு:-**

கார மெவச்சாரன் கலத்த யிந்த மேல்ப் பொடியாய் யீருள்ளி யிஞ்சி ரசத் மேல முன்கில் பார முற்ற வீக்க மதிக முண்டாய் மேலுப்பிச மெருத்தால் நோக்கதிக சாய்க்கு மல நீர்.

53. மல நீரடிக்கில் விம்மி வாய்வு கரப்பான் வீக்கம் பலம் போமதி தகியே பிட்டிட்டு பல மொன்", யிரு களஞ்சி கோமியத்தில் யிட்டெறக்கிச் சீலை வடி திறமான நெய் யதிலே தின்.

54. **பேதிக்கு:-**

தின்முல் சில குறட்டை தேங்காயுஞ் சங்கிலையும், தன்னந் தனியே சாறமுக்கு யின்சே கேள் ஆமணக்கு நெய் கடுகு ரோகணியும் காய்ச்சி யுள்ளில், சாம சத்தி விக்க மலம் சாய்க்கும்.

55. **கிரந்தி குலைக்கு:-**

சாய்க்கும்படி கேளாய் தான் கிரந்திப் புன் குலை,வாய்க்கு வயத்து வலி குட்டம், மாய்க்கும் மருந்தன்னி குலகத்திலுய்யாத மாவிடர்க்கு பன்னீரிச் சூரணங்கள் பார்த்து

56. பார்த்தக் கடை மருந்து பஞ்ச கோலம் விளங்கம், காத்து யிரு சீரகந்தான் மோ மேற்று பொடி யிட்டு பட்டைச் சூரணமும் ரெண்டு பங்கு முட் கலந்து, தட்டிக் கொ தின்றுந்தான்.

57. தின்றுந் தேன் நெய் மதுரம் சேர்ந்த பொடி முககளஞ்சி, பன்றுந் தேன் காலம் ட விடில் லன்னங் கொள்ள, பத்தியம் பால் நெய், கீரைத் தன்டு தரு உள்ளி, உத்த தொரு நற் சுண்டி உன்.

58. உன்னு யிலவங்கம் மோதந் திரிகடுகு, தின்று முத்த நாகப்பூ, திரிபலையம், பன்னும் பொடி பாலுடனே காச்சிப் பாகமுடன் சுக்குப் பொடி நாலுடனே முன் பொடி சேர் நன்று.

59. நன்று பொடி முக்களஞ்சி நாலுந் தேன் சர்க்கரையில், தின்று விடிலா யிஞ்சிதறி வி மென்றறிந்து வீளாமல்க் கட்டு மிக்க பித்த வாய்வு வெப்பு, கீளாக நோக்குஞ் கிரந்தி.

60. கிரந்தி கட்டுஞ் குலை கேசு நவாச்சாரம், பொருந்து யிந்து போக்கரிய புகை மருந்து பச்சை நாவி யடப்பம் விரை நற் கோஷ்டம் வாளம் விரவி, மேவு நிம்பச் சாற்றிலிட மேவும்.

குலைக்கு:-

61. மீது யிலைக் கள்ளி வேர் தனிநெருத்தி அரு மெனவே யிடித்து துய பொடி கேளிரஞ் காசத்தனை பொடியே காலமே தேனிலுன்ன தேசத்தில் குலை போந் தேற.

62. **மகோதரத்துக்கு:-**

தேற பேய்ப்பீர்க்கன் காய் சிதற யிடித்து பிளிந்து சாற பரிவுடனே தான் வாங் கூகின்ற நாய்ப் பெருங்காயம் களஞ்சி நாள் மூன்று நாள் வாங்கீர் சோற்று மகோதரம் போம் சொல்.

63. சொல்லார் கருங்கோளி தோல் போக்கி உட்சதையே, நில்லார் திரிகடுகு நே. காயம் மெல்லாம் மரமஞ்சள் வல் தயிரில் மன்று மென்னையிற் கருகொள், திறள் களஞ்சி சங்கக் கிராணி யாறும்.

64. ஆரு முடும்பு சதையான திரிகடுகும் கூறுங் கொடிவேலி கூறிங்கு, வீறுடைய உள்ளி சீரகம் வசம்பு மொக்கரைத்து மோரிலுண்ண கொள்ளுங் கிருமி ஞனமாம்.

65. ஞனமாந்ததே சதையில் கூழந் திரிபலை வேர், கூனமாந்திரி கடுகு கருஞ் சீரகம், மனமாய் காயங் கடுகிந்து காஇறு மெண்ணையாங் கடுகு, வாய்வு கிருமி போம் வன்மை.

66. வன்னங் காயம் கல்மதமும் வாறுமிந்த நாற் பலமும், கின்னந் தயிர் நீரிற் செய்குடி நீர் நன்னும் பொடி சுக்குடனே மூன்று பலந் தோல் புங்கு சாறலையும் தக்க வட்டத் திருப்பி வேர் தான்.

67. தான் மிக முக்காவலை வேர் தக்க மிலையுடனே பால் மருவு வெள் சாதி பத்திரிக்காய் தேனனையீர் சீர் மோதந் திரிபலயம் சேர்ந்த கருவேம்பு மாமேவு நெய்க் கிருமி அகலும்.

68. அகழு மதஞ் சாத்திலான தயிர் நீர் சரியாய் மிகவுந் திரிகடுகு காடிற்றப்பு புகழ் விடையம் வடிவுடைய சாதிக்காய் வாறு மெண்ணை யாங் கடுகு பொடி படும் வாய்வு கிருமி போற்றி.

69. போற்றம் பிறண்டை சுக்கு பொடி மிளகு திப்பிலியும் மேற்ற மெவச்சார மிஞ்சிரு சீரம் வீற்ற விடையந் தயிரெண்ணெ வெந்த கடுகு கொள்ள பொடிய கிருமி போய் விடும்.

70. விடும் பேயின் குமட்டிக்காய் வேறிற் திரிகடுகு மிடும் போதிரிபலையம் மிர்திந்த படும் போது சித்தா மனக்கெண்ணை சேர்த்து விடில் வாய்வு குன்மம் பேற்ற மலங் கழிக்கும்பின்.

71. பின்று நீர் விட்டான் சார் பேராவின் நெய் கூட்டி சொன்னபடி பாக மிட்டு தின்று விடில் பச்சி கோசந் தோரையே குமதி சாரம் காமாலை.
காமாலை போங் கடுக்காய் காச்சிய நீர் நெய் விட்டு போமே மிளகோமம் பொருந்தரைத்த பான்மையாய் பக்குவமாய்ப் பார்த்தன்டு விடில் பான்டு பித்தக் கிருமி மறந் திக்கெனவே மூலந் திசை.

72. திசையா முலைப் பாலில் சேர்க்கு மெண்ணை கர்க்கம், பசையாயபஞ்ச திரவியம் பாரிரு வேலி விசையார் குப்பை மரமஞ்சள் கடுகுரோகணியிற் காச்சியிட ஒப்புடனே வெக்கை விடுமோது.

73. ஒசவேன் குன்றி விரைத் தோல் போக்கி உட் பருப்பு மாது புளி விரைத் தோல் வறுத்து மேதி யெண்ணை வெண்ணை தவிலோர் களஞ்சி உள்ளவே நீர் கழிச்சல் வஞ்சி*தோல்*நிறைந்த* நின்று போந் தேன் மொழிய நேர்.

74. நேராக நல்வல்ந் தோல் நிறைந்த ஒதித் தோலும், பேராகக் காச்சி நீர் பெய்து கொன்டு சீராக வெந்திறக்கிப் பால் மதுரம் மேவிக் கொள் மேதி வியில் சிந்திப் பெரும்பாடு போம் செல்.

75. <u>கெற்ப விப்புருதிக்கு</u>:-

செல்லாத விப்புருதி சீராம் பிறப்பங் கிழங்கு புல்லு மெனு காய்ச்சி யிடித்துப் பிசைந்து நில்லு மென முன்பு சொன்ன வேரரைத்து முத்தமறு நெய் பாலில் லன்புடனே காய்ச்சி யருந்து.

76. அருந்தும் பொழுது கெற்ப விப்புருதி யாறிடு மாங்கிசைந்த நறு நெய் நாளி சேர்த்திடுவாய் மசந்து கள்ளிப் பாலழுக்கெ சத்தே பழம் புளியும் வெந்தருந்து சேலொத்த கண்ணி பதஞ் சேர்.

77. <u>வாதத்துக்கு</u>:-

சேர்த்தருந்த வாதம் சிதற மருந்தரைக்கில், யேறு மிலைக் கள்ளி பெருக்கஞ் சாற்றில் வீற்றிருந்த மருந்ததின் வேரரைத்து வன்மை பெறத் தானே அருந்தி விடப் போகு மறி.

78. அறியும் பிறண்டை மறளா மனக்கம் வேர் செறியும் புளியறனை சித்திர மூலம்

குறியும் யாமக்காரம் பொருந்த வெள்ளை நெய் தேன் திடமாக மூல மறுஞ் சேர்.

79. எலிச்சைக்கு:-

சேரெருக்கிலைச் சாறு சேர்ந்த வெள்ளை சுக்குள்ளி, கரும் வசம்பு முத்தங் கோஷ்டம், நேராக யீந்தவுடன் திப்பிலியும் வேக வடி காதில் விட, உந்தி விடு மெலிச் சைக் குரை.

சன்னிக்கு:-

80. உரையும் வசம்புள்ளி உத்த கடுகு காயம், புரை பாம்பு கண்ட மொகு பூகை மரையும் கரைத்து வடி வேப்பெண்ணெ காற புதங் சன்னி தூரத்தி விடும் பகள்க் கொள் ளது.

81. ஊறின் முசுமுசுக்கை சோகித் தலை யரைத்து கூறு கறி சீராகக் கட்டியே வீசிய நெய் தடவிச் சுட்டு மண்டலந்தான் தின்னத் தன் சாகிரைப்பு, கடுகவே போய் விடுமே கண்டு.

82. கடுக களி சுக்கிந்துப்பு கல்மதன் கொன்டைக்கை யிருக்கலை நீர் வாத்தரைத்துக் குடிக்கில் வளரில வன் முலை மாதே வயாற களமுளகள முளகள.

83. காய மிந்தப்போது வெங்காரம் சீரகமும் வெயிருப்புப் பொட்டிலுப்பு மெய்யாய்க காயும் பசுமிக் கிசாயத்தில் பாங்கொண்டரைத்துன்ன பொசி நீர்க் கட்டென்றது போம்.

மூல மெல்லாத்துக்கும்:-

84. போ மூல மெல்லாம் புரியா வெறு மாவுடனே---விட்டென் லைக் குள்ளே வைத்து பூவலையாய் காரங்கை காறுமத் பாலிடமுக வாராத தீர திஙமா அளம்பு.

85. சேரா விரை மூலம் செலகாரந் தாளரையும் காராருஞ் சீரகஞ் செங்கத்தாரி நேரே படி நெய்யும் பாலரையும் பாங்காக சேர்த்துண்ணு முடி சிறங்கு விறன முட்டு.

86. முட்டுங் கொடிவேலி மோதகமுஞ் சாதகமும் வெட்டி வேர் கஸ்தூரி மென்றுவுந் தட்டியிட்டு காயவதரேடு கண்டகமும் பீனிசமும் சாயு மிறன மெனச் சாற்ற.

கண்டக பீனிசத்துக்கு:-

87. சாற்று மாடா கோடைத் தயில பிஞ்சிச் சாறு, போத்து முயலின் புருக்கையுடன் யெற்றின் சிறுநீரும் பாசிலையு மிருத்தடனே சாதிலிங்கம், பருவீர் குரணமாய்ச் சொல்.

88. சீத சுரத்துக்கு:-

சொல்லு முத்தக் காசுடமன தோன்மும் பற்படாக மிளை நல்ல சுக்குப் பேய்ப் புடோல் நற்சீந்தில் வல்லியரே நீதமுடன் வைத்த குடிநீர் நயில்த் தேன் கலந்தால் சீத சுரம் போமெனவே செப்பு.

89. ஊ துவலை, நொச்சி, துளசி, கண்டங்காலி, நீதியுடன் வாசது நேர் சமழுய் பீதிலைகள் பிட்டாவித் தேன் கலஞ்சி பெய்து கொள்ளச் சீத சுரம் விட்டேடது மென்றே விளம்பு.

90. நோய்களுக்கு:-

நல்ல மதுர நறுக்கி பிறையளவு சொல்லுங் கரண்டியில் நெய் சுண்டியே, வல்லமையாய் மாற்றுயர்ந்த பொன் போலே வறுத்தரைத்து லேகிய முண்ண தோத்ர விடு நோய் களெல்லாஞ் சொல்.

91. மந்தங்கள் பலவற்றுக்கும்:-

கூறு முருத்தாக கொட்டாட மருந்தரைக்கில் லாறு மாமரைந்ததயில் வித்தரைத்து கறம் ஆவின் பாலில் கொள்ள அகலும் பதினெட்டும் தேன் பாகஞ் சேர் மொழியாள் தேர்ந்து.

92. அன்ன சாரத்துக்கு ஆன கடுகாரும் சொன்ன மடை பிறந்த சோர் கவிச்சல் வன்ன கடுகாயில் தீருமென கண்டே அகத்தியரும் அருத்தே புரைத்தோ மாதி.

93. அறியுங் கடலே கரக்கை நீராகும் பொறி வசனே வெள்ளீரில் போகுமே நெறியுடைய கோரம்பை மந்தம் குந்த தண்ணீர் வாந்தி வக்க போகு மந்தமக் கிரத்தில் போம்.

94. போந்த பயத்தங்காய் போந்த அன்ன மந்தங்கள் வாந்தி செய்யு மக் குலத்தில் மாறுமே சேந்த கடுக்காயும் வேர்க் கொம்பும் களைத்த வெள்ளீரில் குடிக்க படுத்தோடு மென்றே பகர்.

95. பகர்ந்தாரே யின்னம் பயத்தங்காயின்வம் பிருந்த மந்தம் வந்களவில் மெய்யாய் உகந்த காடி தயிர் மோர் மேல் சீலி நீரில் வெள்ளீரில் படாது சுக்குத் தான் குடிக்கப் போம்.

96. போமென்றுருந்தக்கு போத முள்ள காடி குடி ஆமென்ற வரைக்கை காயம் நேமமுள்ள சயிந்திலவனந் தாறு கரப்போ மென்று விபரந் உரைத்தாரம் முனிவர் மேல்.

97. மேலா மகத்தியிலே விரைந்து மந்தந் தாளால் வேல மகிழ் சொன்டி யிரு சீரகம் கோலமுள்ள சுக்குடனே முன்றம் தோன்றொன்றுமவம் தக்கதிலே ஒடு கொளத்தான்.

98. தாலே சுரைக்காயில் தகமையுள்ள மந்தங்கள் புலே மிளகு பொடியுடனே மானே கேள் முக்கரட்டை சாறனையும் மூன்றென்றே பாலும் தாக்க மற மோரிலிருந் தான்.

99. தானே சுரைக்காயில் தகலமயுள்ள மந்தங்கள் புனே மிளகு பொடியுடனே மானே கேள் முக்கரட்டை சாறனையும் மூன்றென்றே பாலும் தாக்க மறமோரிலிருந் தான்.

100. தானுடலில் சீடி தடவிவும் உட் கொள்டால் ஆன சிவதை பவர் காளி பொவபா பற்படாக நெல்லிக்காய் பால வெறித்திற சொற் பகருமாலும் சுகம்.

101. சுக நீர சீடி யென்னை சொல்லுமுடல் விம்பிளக்கால் வகு சிவதை செங்கல் வறந்த பொடி மிகவே வொத்த மெருக் கென்னையுடன் காச்சி மேற் பூசப் பத்தரமே யென்று பகர்.

102. பகர்ந்தாரே யின்னம் பற்படாகம் வெள்ளீரில் உகந்தே யரைத்தத் தடலி பகர்ந்தோ மெனவே வெற்றிலைச் சாற் லரைத்த மேற் பூசவே உடலில் வற்றி விடு மென்றே மதி.

103. மருத்தாவின் பாலில் வளரென்று சாறனையும் வித்தார் கொடிப் பூவு மேவிக் கதித்தே பூசி விட மோதகப்பூப் பூசி விட நன்றாகும் காசினியிலேலென்றே கருநா.

104. கருநக் சிற குறிஞ்சாக் கன வாந்தியான வர்க்கு மருவும் புகழ்க் கறனை மாற்றம் பொருந கமற் பருப்புக் கத்தானை சாந்தியாம் விதித்திலலே யானே. விளம்பு.

105. விளம்பிய காட்டில் மேவுர் கருனைக்கு வளம் பெரிய கொன்றை மாற்றத் தழல் கறனை பிளி முங்கிலே மேவு பொறி சாறனையாம் நாறு மென்னை மோர் மிளகு நன்கு.

106. நன்கும் பிறன்டைக்கு நாறுமே சாறனை வேர் வல்ல மர மஞ்சாக்குமே மதுரம் வெல்லம் புளிக்கா மெலிமிச்சை பென் மயிலே கேரும் களித்த புகழ் மாத் தெனவே கான்.

107. காறவ மெருக்குக் ஒக் கண்டவுடன் நல்லென்னை ஆன திரி மாவிலிங்கை யாகுமே மாவிலத்தில் தாமரைப் பூம் லைக்கு தண்டிலைக்குத் சுக்கரைத்த நேமமுடன் குடிக்க நேர்.

108. நேரான செங்கல் நீர் நிறம் தாமரைக் கிழங்கு வேம்பிலாவுக்கு வேர்க் கொம்பு சீராம் கதலிக் கவிபு பிலிக் காறும் சிற குறிஞ்சா வதனிட திப்பிலி கையாம்.

109. ஆ மதுரமாம் பழக்துக்கான பிளகாரும் நேமமுள்ள மோர் தயிரில் நேமித்தச்

சேமமுடன் யிந்துப்புக் கட்டி யிடவே சகலமும் போம் மந்தத்துக்கே மாற்றமாம்.

110. ஆவதொரு மஞ்சிட்டி மலர் புன்னைநாகம் நாவல் முத்தக் காசுடனே நற் கெந்தம்
தேன் மெழுகு கூடவே யேல மிவை தானரைத்துமே காமுடலில் பூச விடும்.

111. விட்டிலிய தேங்காய் மிகு மந்தமானவர்க்கு மட்டை விழுமாம் பூவு வாகாய்
திட்டமுள வேர்க் கொம்பு கட்டி மிகவும் நறப்பரிசி ஆர்க்கு முறைப்படியே யாம்.

112. ஆமே பவேக் கிழங்கு ஆன உப்பு மேத்திமிட்டு தாமே யிலிக் கஞ்சி தான் குடிக்கப்
போமே மோருடனே உப்பிட்டு முன்னைகையே தான் குடிக்க வேறுமே என்ற விளம்பு

113. விளம்புகின்ற நாவல் மிகு பழத்தில் மந்தம் தளம் பயற தானலித்த தண்ணீர்
வளம் பெரிய பாலுடனே நாவல் பழம் மருந்து வார்க்கெல்லாம் கேரு மிலிச்
சொல்வோம் கிளர்ந்து.

114. கிளர்ந்திய மலா மலகம் கேரு மதி மதுரம் வளர்ந்த பசுச் சாணி ரசம் வாங்கி
வைக்க உள மகிழ் சிற பயத்தஞ் சாற்றி விலிச் சீரரப்பும் பெருங்காயம் பருகி
யிடப் போமே பறந்து.

115. பறவை வைத்த தேறும் பாலெலுமிச்ச ரசம் முறையுடனே சடம் விடூ முண்டால்
புறவு செய்ய சட்டி தனில் நெல்லிக்காய் தான் வேப்பம் பட்டையுடன் விட்டரைத்து
கொள்ள வியல்.

116. வியல் புள்ளி மானிறைச்சி மிகவே யருந்திடுக் கால் வயலில் கருங் காலி யிட
வாந்தி செய்யும் மயலாக லங்கணத்தில் போமே நலம் பெறவே யிப்படியே மங்கு
மெனச் சொல்லி மதி.

117. மதித்திடுமே வெள்ளாட்டு மாங்கிஷங்கள் தானருந்தில் விசித்த அசீரண மந்தம்
மேல்ப் பொசிக்கு கரத்த விளாம் பழத்தில் தீரும் மிளகு பொடி மோரில்
கொளாங் காச்சிக் கொள்ளுமே.

118. குருஞ் சாதிக்காயைக் குடித்தாலும் வெள்ளாட்டுக் கிடங்கோ செம்மறி யாட்டுக்
கிருவேலி யிதும்ம ஒரு மிளி மாங்கிசத்திலற்ற பிரியத்தினையும் நாடியிட மில்லை யென
நல்கு.

119. நல்கு புள்ளி மானுக்கு நலமாஞ் சிற கடலை வல் மிளகு கருங்காலி வகை கொள்ள
வல்ல ஒவ்வொன்றே யாவும் முதிக மிக மூன்று கொள்ள கொல்லை யிதன் போமே
கூற.

120. கூறும் பசு யெருமை கொண்ட மந்தம் வந்தளவில் வீற சிற கடலை மிகப் பருப்பு
கூறுங் கருங்காலி தன்னிலையும் கலந்தரைத்துக் கொள்ள தருமே சுகமெனவே தான்.

121. தானி பிரி மேதி தன்னிறச்சி தின்றவர்க்கு ஆன தொண்டை வெறரைத்து அன்பாய்க்
கொள் போவ நெஞ்சே செம்மறி யாட்டுக்கச் சேர் சுட்ட கஞ்சி யென்றுங்
கொம்மை மூலையாளே கொள்.

122. கொள்ளு மயிலிறச்சி கர் விடுங்களாவுடன் விள்ளும் விளா முருங்கை வேருடனே
நல்ல கருங்காலி மூன்றுங் கசாயமிடத் தான் போமே தரும் காலமே யுரைப்பு
தான்.

123. தாரா முயலிறச்சி தந்த அசீரணக்கு ஆன மிளகு பொடி அன்பாய் மான் மோருடனே
காச்சிக் கொள் மொய் குழலே தீருமென் பாருளதோர் வாகடத்தின் பண்பு.

124. பண்பாஞ் சகலம் பருகிடு மாங்கிஷங்களுக்கு நன்பாகக் கத்தானை நாடுமே அன்
பாய் பொதுவா யிறச்சிக்கும் பொருந்து மன்னவத்துக்கும் மிலவாக மெனச் செய்பு
மேல்.

125. வீறுவ கத்தானை மேவுங் கருங்காலி யிலை முரு முருங்கையிலை மூன்றுமே சார
அரைத்து மனிப் பாக்களவு அன்பாக வெந்நீரில் உரைக் கெரைச்சி யத்திடுக்கு புள்.

126. உள்ள வல்லக் கோளி உயரிறைச்சிக் கன்பாக வல்ல முருங்கை வேர் வர்த பட்டை
தள்ளுங் கொதித்தடவனை கட்டிக் குடி நீரருந்த விருங்வரி யோருமே மெய்.

127. மெய்யான நாவி விடூந் தான்றெந்தாக்கால் நெய்யுடனே மந்திடூட்டி நேர் மறை
வெம்ப ஒட்டலரையும் கட்டிக் கொள்ளென்றே சிரகீரை விட்டலை மென்றே விளம்பு.

128. விளம்பினிய மிதக்கு மேலினியே மாவிலிங்கை அலந்த சிற குறிஞ்சா வாலுமே
அசம்பெறவே மோர் காச்சித் கவழ பிளகு பொடியிடவே சுர் வேல் விரிய னேயே
கொள்.

129. கொள்ளும் பரமான குளிர் மந்த மாழுக்கால் நல்ல சிற குறிஞ்சா நந் கருக்
காய் வல்ல திப்பிலியிலே யலைக்குத் தேன் மொழியே தான் குடிக்க ஒப்பின்லே
வென்பழ யுரை.

130. உரைப்பேன் பரிமாணம் உத்தமந் தந்தாழமல் விறிக்தருந் தண்ணீரில் மெய்யாத்
தறித்த வேர்க் கொம்பு கொண்டு மிளி மெய்யா யரைத் தருந்த சுர்க்
கொல்ல லேனென சொல்.

131. சொல்லும் சிற பருப்புச் சோற்றிடு மந்தங்கள் வல்லமையாய் மோர் கொ
வாந்திக்க நல்ல வெள்ளடவே சோற தின்ன யிப்போத நெய் கொருத்தால்
முல்லை நகையாளே மொழி.

132. மொழிந்தோ மஜரத்தில் மொரிந்த மாழுக்கால் தளந்திடுமே மோர் குருந்த
கண்ணீரில் ஈலந்கை காடி தனி யாளுவ் சுருக்காய்ப் பொடி யிடவே யோடு
மெனவே யுரை.

போகர் வாகடம் முற்றும்.

**

<u>கிறந்தி அரையாப்புக்கு என்னை :-</u>

பறங்கிப் பட்டை பலம்.10, செங்கத்தாரி பட்டை பலம்.௧,
வெள்ளை புண்டு பலம். , கார்போகரிசி பலம்.௧, வசம்பு பலம்.௧, நீரடி முத்து
பலம்.௧, கரு ஏசீரகம் பலம்.௨, சிறுகீரை வேர் சங்க வேர், நொச்சி வேர்
நிலை வலைக்கு பலம்.௧, விளக்கெண்ணை படி.3/4, காய்ச்சிக் கொடுக்கவும்.
கடும் பத்தியம்.

<u>மூலக் கிராணிக்கு :-</u>

சுண்டை வத்தல், கருநிம்பத்திரி சுவைக்கு மாங்கனி தோடு
சொல்லு மோதகமு நெல்லி தாதுகனி தொடு வெந்திய மோடெகும்
விள்முரைத்தபடி யொன்ற பட்டிடவே தப்பியே மிள வறுப்பதாய்
மிருதுவாய்க் கிடி வடி கொளுத பொடி வெருகடி பொடி தயிரிலே
கொண்டிடப் பொருமல் மாந்த மிகச் கிறிச்சல் குமறி நின்றிடும் களிச்சலும்
சுற மூல பேதி சோர மொடு யெரு மூலக் கிராணியுமடா அகை கண்ட தத்தியு மென்ற
புத்தியுள்ள பண்டித தொளில் நம்புவீர் கருணை மாமுறதம் உதவு கீர் மகள் கைம்
மருந்தெனச் செய்யுமே.

<u>எரி குன்மத்துக்கு :-</u>

மயில் தத்தம் விராகனிடை.௧, அபப்பொடி விராகனிடை.௧, நாயுருவிச் சாறு
விட்டு அரைத்த கிலம் விராகனிடை தின்னத் தீரும்.

<u>மேக காங்கைக்கு மருந்து :-</u>

பறங்கிப் பட்டை பலம்.5, அமுக்கிலாங் கிழங்கு பலம்.5, குங்கைநீர் பலம்.5
தேத்தான் விரை பலம்.௧, நாட்டுச் சர்க்கரை பலம்.12, இவை இடித்துச் சூரணம்
பண்ணி சர்க்கரையில் கலந்து பிற்பாடு ஆவின் நெய்யில் கலந்த கலமான் கொம்பு
பற்பத்துடனே பணவிடை கொள்ளவும். இச்சா பத்தியம்.

<u>பற்பம் பண்ணுகிறது விபரம் :-</u>

தேத்தாங் விரையை அரைத்து கவசம் செய்து மண்சீலை செய்து குக்குட புடம்
போடவும்.

<u>ரணத்துக்கு சிலந்திக்கு தயிலம் :-</u>

பால் தக்கம், மயில் தக்கம், கார்போகவிரை, நீரடிமுத்து, வசம்பு, கஸ்தூரி

மஞ்சள் வகைக்கு விராகனிடை.2, அலாயிலை, எருக்கிலை இரண்டும் சாறு பிழிந்து இந்த சரக்கெல்லாம் சாறு விட்டு அரைத்த ரசம் விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, கூட்டிப் போட்டு அரைத்து இரண்டு சாமம் இந்த மருந்தும் ஒன்றாய்க் கட்டி அடுப்பில் வைத்து அதில் தேங்காயெண்ணெய் உழக்கு வார்த்துப் பதமாய்க் காய்ச்சி ரணத்தில் போடவும். புரை விழுந்தால் உள்ளே வத்தி செய்து வேத்தவும்.

வைத்திய நிகண்டு: சுருக்கம்:-

அட்டி மிறட்டி என்பது அதிமதுரமாகும். சுண்டியும், வேர்க் கொம்பும், சுக்கு, மடி மயிர்க்கு பெருங்காயம். மாரிச மென்பது வளர் சாதிலிங்கம், பச்சிலை என்பது மலைப் பச்சையாகும், காட்டெருமை என்பது சதிரக் கள்ளியாகும். களவிந்த மென்பது மலை மஞ்சளாகும். வட்ட அகிலாந்தி பூவரசு ஆகும். விட மென்பார் நாபி யென்பார். திரிபாலை என்றது கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், திரிகடுகு சுக்கு திப்பிலி, மிளகு. தேசி என்பது எலுமிச்சையாகும். வெள்ளள்ளி என்பது வெள்ளுள்ளி யாகும். ஈருள்ளி என்பது ஈர வெங்காயம். சுபந்தை என்பது நாரத்தையாகும். கூவளை என்பது வில்வ மாகும். சித்தாமல்லி சிறு தொட்டியாகும். அமுர்த வல்லி சீந்தி யாகும். குல்லை என்பது குறிஞ்சாவாகும். அசுவ கெந்தி அமுக்கிலாவாகும். சந்தூலவனம் இந்துப்பின் பேரே. தருண் கெருடக் கொடி தலை சுருளி வள்ளி. சூத மென்பது ரசமாகும். ஈயம மென்பது வெள்ளீயமாகும். வாதமடக்கி கருகளையாகும். மலை தாங்கி யென்பது பொன் முசுட்டையாகும். காணடைகன் பிளவு, பிறண்டை, வச்சிரமே. காடை பருக்கும் வேறண்டை மென்பது ஆமணக்கு. கொட்டை சங்குநிஞ்சி. அவுரி யென்பது நீலியாகும். கழல் கொடி யென்பது களச்சியாகும், முப்பிய மெரித் தோன் முள்க் கொறண்டி நிக்கந்தி யென்பது நிலக் குமிளாகும். வில்லாவந் வல்லாரையாகும். நில மீறாகம் நிலக் கடம்பாகும். ஒந்தா விழை செந்தம்பையாகும். மக்குடோரம் மருத மரமாகும். கரு குடியாவது சகுதியாகும். சிவ முனி யென்பது அறுகன் பகரு வீலி யென்கிறது. விருமிச் செடிக்குப் பேர். விளல்ரிசி யென்பது விளாம்பழத்த விரை கறிப்பிடிகி யென்பது கரிசிலாங்கண்ணி. தை வேளை யென்பது நல்ல வேளை முட்டைக் தோடாளென்பது கோளி முட்டைத் தோல். சுழலா வாரை யென்பது பொன்னாவாரை. பாதாள மூலி யென்பது செருப்படிச் செடி. முசலை யென்பது முசு முசுக்கை கண்டு யென்றது கல் நாரு வெள்ளைக் குந்திருக்க மென்றது குங்கிலியம். நெய்க் கொட்டாவென்றது புச்சாங் கொட்டை பேய்த் தவளை யென்ற நாய் வேளை, கொடி வேலி யென்றது சிரு வேலி என்றது இது இரண்டுக்குப் பேர் சித்திர மூலம். பேய்க் குமி யென்பது பேய்ச் சுரையாகும். பன்னி கொண்டான் ஆலாவாகும். செருக்கு வட்டம் செருப்படிப் பூடு சித்தடி யென்பது சிறு புள்ளடியாகும். கருந் திரை யென்பது கய்யாந்தகரை தீட்டியாவது வெட்டிக்குப் பேரே. துலாமென்பது தீருவாகும். சிலன் வட்டம் நந்தியா வட்டம் காட்டு மல்லிகை விடாகும். தரும் மூமி வட்டம் தகரையாகும். வாகனமாவது மயிலாகும். ஓவனி யென்பது கோளியாகும். கூர்ம மென்பது ஆமையாகும். பிரமென்பது பிரய் மரமாகும். விளாறை லென்பது விளாமரமாகும். அகஸ்தியாவது அத்தியாகும். குருந்தாக் காறுவாது கறிய குமிளாகும். சித்திரைப் பாலவறை அம்மான் பச்சரிசி தொட்டாச் சுருங்கி பிஞன் வணங்கி சில்லியாவது சிறகீரையர்கும். அருக்த லென்பது அருக்கிரையாகும். காறண பிரம்ம தண்டு சபரையாகும். கொடுப்பையாவது பொன்னாங்கண்ணி. ஆரோகாந்தி ஆகசியாகும். கொக்கு மா வென்பது அசுவமாகும். பேரமுட்டி பெருங்குறிஞ்சி சிக்காமுட்டி குறவிஞ்சியாகும். அரம்பை கத்திவாழையாகும். காஞ்சொறி யென்பது செந்தொட்டியாகும். நீர்க் குன்றி யென்பது நொச்சியாகும். குடலி யென்பது சங்கு குதமாகும். குடலிப்பி யென்பது சங்கன் குப்பி. குவளை யென்பது அலை வளையாகும். மிடாட்டோலென்பது பேய்ப்புடலாகும். முஞ்சி யென்பது பேய்ப்பீர்க்காகும். பிறந்தாவென்பது அயமாகும். வேதிரி யென்பது இலந்தை யாகும். மல்லிகையாகும். குல்லைக் களம் குல்லையின் பேரே. தாள் மூலமே. நெரும் பனையாகும். விருசி யென்பது நிலப்பனையாகும். முதியார் கூந்தல் சலறிக் கொடியின் பேரே. புனலித் தண்டு வெள்ளைச் சாறனையாகும். செம்முள்ளி

யென்பது பெரிய நாருருவும் கள்ளியாகும். கத்தன் குரும்பை யென்பது காட்டில் கரும்போடே விளை குரிய வார்த்தை நிம்பமென்பது வேம்பாகும். சம்பு வென்பது நாவலாகும். செம்பா வென்பது செவ்வுருவி. கரும்பாட லென்பது கரு நாயுருவி. பிட்ர வென்பது நாயுருவி குமரி யென்பது கத்தாளையாகும். பச்சிலே யென்பது காவிரம் தாம் புளியாகும். உருடன் முதலி முருங்கையாகும். கேதகை யென்பது தாளி யின் பேரே. பாடலந்கா.ன. பாதிரியாகும். அறக்க மென்பது சர்க்கரையாகும். சாலமாவது கஞ்சாங் கோரை. கஞ்சா நாய்த் துளசியாகும். நமல நெல்லி அய்ங் கோலந்தானே புளிஞ்சியாமே. சிற லுதலை முள்ளியாகும். லருகலே யென்பது கத்தவியாகும். சதாவேரி யென்பத் நீர் வள்ளி யென்றும் பன்னி முட்டா னென்றும் தன்னி முட்டான் கிழங்கு கும்ப் பாண்ட மென்பது பெரும் பூசனிக்காயாகும். கனையின் பகரு கரும்பே; கறல்லா நாளி கரந்தை காஞ்சிரை யென்பது புளியாயாகும். யிம்பழல் தானே. சாயவேராகும் கோளி யென்பது ஆலாவாகும். பூரபத்திரியே சிறுகுறிஞ்சாவாகும். பஞ்சம் பாளை ஆடு தின்னுப் பாளை வனவன் முளையே. கறமுங்கிலாகும். சால லென்பது கோளியாகும். முக்காவேளை யென்பது முட் கொவிஞ்சியாகும். உத்தமதாளி உயர் வேலிப் பருத்தி சித்திர மூலி கொடிவேலியாகும். திருமேனி யென்பது குப்பை மேனி. மடி சருகி யென்பது நாவுக்கினியாக் வெத்திலையாகும். பிருவேலி யென்பது விலாமிச்சை யாகும். முடிவாளை யென்பது வெட்டி வேராகும். பாடலமாவது ஆடாதோடையாகும். சித்தவென்பது பற்படாகமாகும். நாவியனகள்ளியாகும். பாதாள வேதி அறகன் பகரு. செஞ்சோத்தி யென்றது கமப்பரு. கொம்மாயப் புரு இது இரண்டுக்கும் பேரே. கெங்காசலக் குப்பி யென்றது காசியிலிருந்த வந்த வலைபக் குப்பி. பவளச் சாற மென்பது பவளக் கொடி. கார்சோலரிசி யென்றது கார்போகவரிசி. வெள்ளைத் தள்ளி யென்றது வெள்ளை முள்ளி. காடைப்புட மென்றது காட்டெருவுப் புடம். ஆனைக் காலி விரை யென்றது புளைக்காலி விரை, மஞ்சாடி யென்றது திராசு நிறை. கொருப்பை யென்றது பொன்குன்னி. பூலோக சிங்கி யென்றது. தொட்டாச் சுருங்கி முப்புர பெரித்தாவென்றது. முங்குருந்கம் பட்டை முட் கொஞ்சி இது இரண்டுக்கும் பேர். பெருமைக் கத்தாளைக் கொடி யென்றது தாளை விழுது. பால் குட்டை யென்றது வேலிய னைஞ்சான். குறவிஞ்சி யென்றது பிள்ளையார் தேங்கா மாறு. முசலைக்காது யென்றது யீலேமான் செவித்தளை. பிள்ளை வளர்த்தி யென்றது ஆனி மிட்டாள். அண்டங் காக்கை யென்றது பருந் தலைக் காக்காய். வாலந் திரி சல்லி யென்றது பிள்ளை பெத்த சல்லி முடைத்துக்கும் பேர். செம்பைச் செடி யென்றது வாதை அவரை, ஆயிரங் கதிரோனென்றது ஆலமரம். வசை நாட்டு பாதாள சோதி யென்றது அறுகம் புல்லு. வருக்கைப் பழ மென்றது பலாப்பழம். பூமியிலிருந்து வெடித்த பழத்துக்கும் பேர் மகா விடந் துறவில் கோடதென்றது. காமரை நால் சிறு சுக்கினி வேரென்றது ஈ நரியுடைய பட்டை யென்றது வெள்ளியத் செடி. பூமிலிந்தாவது பலாக் கொட்டை.

****

சு.ச: 28.2.64. முற்றும்.

****

339